


Shalom

தனி பிரதி ரூ. 5/–
ஆண்டு சந்தா ரூ. 60/–

# அன்பு பகிர்வு இயக்கம்

செய்திமலர்

மலர் : 8
இதழ் : 6
ஏப்ரல் – 2012

## அவர் (இயேசு) இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்.

மத்தேயு 28:6

ஆசிரியர் சகோ. வே. தேவதாஸ்



சுதேச ஊழியர் சாட்சி

# சகோ. வாஜ்ஹிங் முனியா

முனியக்கூட்டா, இராஜஸ்தான்

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். எனது பெயர் வாஜ்ஹிங் முனியா. நான் இராஜஸ்தான் மாநிலத்தில் பான்ஸ்வாடா மாவட்டத்தில் உள்ள முனிய கூட்டா என்ற கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி.

நான் பாவம் என்றால் என்ன என்பதை அறியாமலே பாவங்களைச் செய்து கொண்டு மிகவும் மோசமான ஒரு மனிதனாக வாழ்ந்து வந்தேன். எனது கிராம மக்களைப் போல நானும் மந்திரவாதிகளை தெய்வமாக மதித்து மந்திரக் கிரியைகளைச் செய்து வந்தேன்.

ஆனாலும் எனது உள்ளத்திலும் இல்லத்திலும் சமாதானம் இல்லாமல் கஷ்டப்பட்டு வந்தேன். சமாதானம் வேண்டி பல பாவமான காரியங்களையும், மந்திரக் கிரியைகளையும் செய்து வந்தேன். ஆனாலும் எந்தவித பலனுமில்லை.

இப்படியாக மனம் சோர்ந்து போன நிலையில் இருக்கும்போது எங்கள் கிராமத்தின் அருகிலுள்ள ஹரேந்திரகட் என்ற கிராமத்தில் சகோ. பாதர் பாரியா அவர்கள் கூட்டம் நடத்துவதையும், இயேசு கிறிஸ்துவையும் குறித்துக் கேள்விப்பட்டு, அங்கு சென்று கூட்டத்தில் கலந்து கொண்டேன். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எனக்காக ஊழியர் ஜெபித்தார். ஜெப நேரத்தில் தேவன் என்னைத் தொட்டார்.

தொடர்ந்து கூட்டத்தில் கலந்து கொண்டு பாவங்களை அறிக்கையிட்டேன். 15.11.1996 அன்று தேவன் என்னை இரட்சித்தார். என்னுடைய உள்ளத்திலும் குடும்பத்திலும் தெய்வீக சமாதானம் வந்தது. தொடர்ந்து குடும்பமாக ஆலய ஆராதனைகளில் கலந்து கொண்டு ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்தேன்.

அதன்பின் எனது சொந்த ஜனங்களைக் குறித்த பாரத்தை தேவன் எனக்குக் கொடுக்கவே, என்னை தேவனுடைய ஊழியத்திற்கென்று அர்ப்பணித்து ஷாலோம் ஊழியத்தில் இணைந்து எனது சொந்த ஊரான முனியக் கூட்டாவை மையமாக வைத்து ஊழியம் செய்து வந்தேன். தற்போது B.Th., படித்து 20.11.2009 அன்று ஷாலோம் போதகராக அபிஷேகம் செய்யப்பட்டு வல்லமையாக ஊழியம் செய்யும்படியாக தேவன் கிருபை புரிந்துள்ளார். தேவனுக்கே மகிமை!

எங்கள் பகுதியிலுள்ள அனைத்து கிராம மக்களும் இரட்சிக்கப்படவும், அநேக ஊழியர்கள் எழும்பவும், கிராமங்கள் தோறும் சபைகள் கட்டப்படவும் ஜெபியுங்கள். எங்கள் ஊழியங்களுக்காகவும், எனது குடும்பத்திற்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள்.

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : **Dr. Vinod Kumar,** Marthandam

# உங்கள் சகோதரனிடமிருந்து....

*கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!*



உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் யாவருக்கும் எனது அன்பின் வாழ்த்துக்கள். கடந்த மார்ச் மாதம் முழுவதும் கர்த்தர் நம்மை காத்து வழிநடத்தி, ஏப்ரல் மாதத்தை காணச் செய்தபடியால் அவரைத் துதிப்போம்.

பணித்தளத்தில் குஜராத், இராஜஸ்தான், மத்தியபிரதேசத்தில் உள்ள அனைத்து ஊழியர்களின் கூடுகைகளை தேவன் அபரிதமாக ஆசீர்வதித்தார். 04.03.12 ஞாயிற்றுக்கிழமை அன்று இராஜஸ்தானில் பிஜல்பூரில் தேர்வு எழுதும் மாணவர்களுக்காக விசேஷித்த பிரார்த்தனை நடைபெற்றது. **சகோதரி.வஹிதா தேவதாஸ்** அவர்கள் குழுவாக சென்று நடத்தினார்கள்.

மார்ச் 5ம் தேதி முதல் 31ம் தேதி வரை புதிதாக ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்த 27 சுதேச ஊழியர்களுக்கு 1 மாத சிறப்பு பயிற்சி நடைபெற்றது. தேவனுடைய வசனத்தில் பெலப்பட்டு, அபிஷேகத்தில் நிறைந்தவர்களாய், புதிய தரிசனத்துடன் பணித்தளம் செல்ல ஆயத்தமாகிறார்கள். இவர்களை ஜெபித்து மாதந்தோறும் ரூ. 2000/– கொடுத்து தாங்ககூடிய 27 ஆதரவாளர்கள் தேவை. ஜெபியுங்கள்.

சேவா பாரத் மூலமாக நடைபெற்ற 1 வருட வேதாகமப் பயிற்சியை முடித்த 30 ஊழியர்களுக்கான பட்டமளிப்பு விழா சுமார் 300 ஊழியர்களுக்கு Secundrabad ல் நடைபெற்றது. இந்த பட்டமளிப்பு விழாவில் சிறப்பு செய்தியளிக்க அடியேனுக்கு தேவன் கிருபை தந்தார்.

மார்ச் 9 முதல் 13 வரை தூத்துக்குடியிலிருந்து அன்பு போதகர் **எட்வர்ட் சாம்ராஜ்** (WME சபை) அவர்களும் போதகர் **ராஜாராம்** (A.G.சபை) அவர்களும் பணித்தளத்திற்கு வருகை தந்து ஊழியங்களை நிறைவேற்றினார்கள். அவர்கள் வருகை மிக ஆசீர்வாதமாக இருந்தது. மேலும் ஷாலோம் ஊழியர்களுக்காக ஜெபிக்கவும், பீல் மக்களை நேசித்து இன்னும் காணிக்கைகளை அனுப்பவும் உறுதி கூறியது எங்களை இன்னும் உற்சாகப்படுத்தியது.

மார்ச் 12 முதல் 17 வரை மற்றும் 20 ஆகிய தேதிகளில் 6 இடங்களில் குஜராத்திலுள்ள அனைத்து சபைகளின போதகர்கள், ஊழியர்கள் மற்றும் மூப்பர்களை சந்தித்து சிறப்புக் கூட்டங்களை நடத்தவும், திருச்சபை வளர்ச்சிக்கான திட்டங்களை பேசி ஜெபிக்கவும், திட்டமிடவும் தேவன் கிருபை தந்தார்.

## ஷாலோம் CBC ஊழியங்கள்

கர்த்தருக்கு சித்தமானால் வரும் மே மாதத்தில் நமது பணித்தளங்களில் உள்ள நம்முடைய 600க்கு அதிகமான சபைகளில் 30,000 க்கும் அதிகமான சிறுவர்களுக்கு **CHILDREN BIBLE CLASSES "எனது அழகான இருதயம்"** என்ற தலைப்பில் 10 நாட்கள் நடத்த உள்ளோம். அதற்கான பாடப்புத்தகங்கள் அச்சிடும் பணி, பாடல்கள் பாடி CD யில் பதிவாக்கும் பணிகளுக்காக ஜெபியுங்கள். ஏப்ரல் மாதத்தில் 4 பிரிவாக 150, 150 பேர்களாக 600 CBC இயக்குனர்கள்

பயிற்சிக்காக ஜெபியுங்கள். இப்பணிகளுக்காக **ரூ. 3 இலட்சங்கள்** அவசர தேவையாக உள்ளது. CBC யில் ஒரு மாணவருக்கு **ரூ. 10/– வீதம்** ஜெபித்து தாங்ககூடிய ஆதரவாளர்கள் தேவை. உங்கள் சபை மூலமாகவோ, குடும்பத்தின் மூலமாகவோ ஜெபித்து தாங்க முன்வாருங்கள்.

## பெரிய வெள்ளிக்கிழமை உயிர்த்தெழுந்த திருநாள் ஆராதனைகள்

கர்த்தருடைய சித்தத்தின்படி நடைபெற்று வரும் **40 நாட்கள் உபவாச ஜெபங்களில்** விசுவாசிகள், மூப்பர்கள், ஊழியர்கள் ஆயிரம் ஆயிரமாக பங்கெடுத்து வருகிறார்கள். தேவனுடைய நல் ஆசீர்வாதங்களை அவர்கள் பெற்றுக்கொள்ள ஜெபியுங்கள். **ஏப்ரல் 1ம் தேதி குருத்தோலை ஞாயிறு மற்றும் 5ம் தேதி பெரிய வியாழன் அன்று அனைத்து சபைகளில் நடைபெறும் கர்த்தருடைய பந்தி ஆராதனைக்காக ஜெபியுங்கள்.**

குறிப்பாக **பல நூறு பேர்கள்** பெரும்பாலான சபைகளில் ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய பந்திக்கு ஆயத்தமாகி வருகிறார்கள். அதுபோல் 06.04.12 பெரிய வெள்ளிக்கிழமை அன்று சபைகளில் கிறிஸ்துவின் அன்பு ஊற்றப்படவும், **உயிர்த்தெழுந்த திருநாளான 08.04.2012 அன்று சபை மக்கள் உயிர்த்தெழுந்த இயேசுவை ஆராதித்து, தேவனுக்கு சாட்சி உள்ள பிள்ளைகளாய் விளங்க ஜெபியுங்கள்.**

மேலும் தூத்துக்குடி தலைமை அலுவலகம், மற்றும் தாகோத் பணித்தள அலுவலகம், Shalom Charity Mission மூலமாக நடைபெறும் ஆதிவாசி மாணவர்கள் கல்விப்பணிகள், ஷாலோம் முன்னேற்ற பணிகளுக்காக அனுதினமும் ஜெபியுங்கள்.

மாதந்தோறும் ரூ.500 ஜெபித்து கொடுத்து தாங்கக்கூடிய 1000 ஆதரவாளர்கள் உடனடியாக தேவைப்படுகின்றனர். அதுபோல் ஷாலோம் ஊழியங்களை அறிமுகப்படுத்தி காணிக்கைகளை சேகரித்து அனுப்பக்கூடிய பிரதிநிதிகள் ஒவ்வொரு மாவட்டங்களிலும் தேவை. அதற்காக ஜெபியுங்கள். ஆவியானவர் ஏவினால் தாங்க முன் வாருங்கள்.

பீல் மக்கள் மத்தியில் நடைபெறும் ஷாலோம் ஊழியங்களை நேசித்து, ஜெபித்து தாங்கும் உங்கள் யாவரையும் தேவன் தாமே ஆசீர்வதிப்பாராக! குறிப்பாக தேர்வுகளை எழுதிக்கொண்டிருக்கும் உங்கள் பிள்ளைகளுக்கு தேவன் சிறந்த ஞானத்தை கட்டளையிட்டு உன்னதமான ஆசீர்வாதத்தை கட்டளையிடுவாராக! மேலும் மேற்படிப்புகளுக்கான வாசல்களையும் தேவைகளையும் கட்டாயம் தேவன் தாமே சந்திப்பாராக!

"***கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கி, உனக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர் என்பதே***" (எண். 6:24–26)

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(பேராயர் **V.** தேவதாஸ்)

**என்னுடன் தொடர்பு கொள்ள**
**09377445468**

# ஷாலோம் ஜெப பங்காளர்கள்

## *(Shalom Prayer Partners)*

***கர்த்தருக்குள் பிரியமானவர்களே,***

ஜெபத்தினைக் கேட்கிறவரும், நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களை வாழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். கர்த்தருடைய பெரிதான கிருபையினால் நம் ஷாலோம் ஊழியங்கள் குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் பீல் மக்கள் மத்தியில் வளர்ந்து வருகின்றது.

அனுதினமும் இரட்சிக்கப்பட்ட ஜனங்கள் சபைகளில் சேர்க்கப்பட்டு வருகின்றனர். தேவன் தந்த தரிசனமான 1 கோடி பீல் மக்கள் இரட்சிப்பின் பணியை பீல் சுதேச ஊழியர்களுடன் இணைந்து நிறைவேற்றி வருகிறோம். மேலும் இரட்சிக்கப்பட்ட சிறுவர்களும் நன்றாகப் படித்து சமுதாயத்தில் முன்னேறி வருகிறார்கள். மூப்பர்கள் மத்தியிலும் ஆவியானவர் தம்முடைய வல்லமையை ஊற்றி வருகிறார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

இந்த ஊழியங்களை ஜெபத்தினாலும் பொருளுதவியினாலும் தாங்கி வரும் தேவ ஜனங்களுக்காக தேவனைத் துதிக்கிறோம். இருந்த போதிலும் ஊழியங்கள் இன்னும் வல்லமையாக வளர்ந்து பெருகவும், 1 கோடி பீல் மக்களை தேவன் இரட்சிக்கவும் உங்கள் அனைவருடைய ஜெபங்கள் மிக அவசியமாக தேவைப்படுகிறது. இஸ்ரவேல் ஜனங்களை நடத்திச் சென்ற மோசேயினுடைய கை தளர்ந்து போகையில் ஆரோனும், ஊரும் மோசேயின் கைகளைத் தாங்கிப் பிடித்தார்கள். அதே போல் ஊழியப் பாதையில் எங்களை உங்களது ஜெபத்தினால் தாங்க அன்பாய்க் கேட்கிறோம்.

- **உங்கள் விலையேறப் பெற்ற ஜெபம் இன்னும் எங்களைத் தாங்கும்.**
- **உங்கள் விலையேறப் பெற்ற ஜெபம் இன்னும் எங்களைப் பாதுகாக்கும்.**
- **உங்கள் விலையேறப் பெற்ற ஜெபம் இன்னும் எங்களைப் பயன்படுத்தும்.**
- **உங்கள் விலையேறப் பெற்ற ஜெபம் இன்னும் எங்களைப் தப்புவிக்கும்.**
- **உங்கள் விலையேறப் பெற்ற ஜெபம் இன்னும் எங்களைப் பெலப்படுத்தும்.**

அது மட்டுமல்லாமல் திரளான பீல் ஆதிவாசி மக்கள் உங்கள் ஜெபங்கள் மூலமாக இரட்சிக்கப்படுவார்கள். ஆகவேதான் ஜெபிக்க ஷாலோம் ஜெபப் பங்காளர்கள் (Shalom Prayer Partners) தேவைப்படுகிறார்கள். நீங்கள் ஜெபப் பங்காளர்களாக இணையும் பட்சத்தில் உங்களுக்கு ஒவ்வொரு மாதமும் ஜெபக்குறிப்புகளை அனுப்பி வைப்போம்.

நீங்கள் நமது ஷாலோம் மிஷனெரி பணிக்காக, பீல் மக்களுக்காக, விசுவாசிகளுக்காக,

திருச்சபைகளுக்காக, திருச்சபை மூப்பர்களுக்காக, திருச்சபைப் பெண்களுக்காக, திருச்சபை வாலிபர் & சிறுவர்களுக்காக மேலும் அங்கு நடைபெறும் சிறுவர் ஊழியங்கள் மற்றும் ஷாலோம் சிறுவர் விடுதி, பள்ளிகளுக்காக மற்றும் சமுதாய மேம்பாட்டுப் பணிகளுக்காக, முன்னேற்றப்பணி, நிர்வாகப்பணி மற்றும் எங்களுக்காகவும் **தினமும் 5 அல்லது 10 நிமிடங்கள் ஜெபிக்கலாம். அல்லது வாரத்தில் 1 நாள் 1 மணி நேரம் தனியாகவோ, குழுவாகவோ ஜெபிக்கலாம். அல்லது மாதத்தில் 3 வது சனிக்கிழமை சங்கிலித் தொடர் ஜெபத்தில் 1 மணி நேரம் இணைந்து ஜெபிக்கலாம்.** அல்லது ஏதாவது ஒரு விதத்தில் உங்களை ஜெபிக்க பட்சமாய் கேட்கிறேன். இந்த ஜெபத்திற்காக நீங்கள் வேறு எங்கும் செல்லத் தேவையில்லை. உங்கள் வீட்டிலிருந்தே ஜெபிக்கலாம். ஜெபக்குறிப்புகளை உங்கள் முகவரிக்கு அனுப்பி வைக்கிறோம்.

கிதியோனுக்கு தேவன் கொடுத்த 300 பேரைப் போல எங்களுக்கும் 300 பேர் ஜெபிக்கத் தேவை. இதை வாசிக்கின்ற தேவ பிள்ளைகளே ஊழியங்களுக்காக ஜெபிக்க முன் வருவீர்களா? முன் வரும் தேவ பிள்ளைகள் **29ம் பக்கத்திலுள்ள படிவத்தினை நிரப்பி** அதை கத்தரித்து தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்ப அன்பாய்க் கேட்கிறோம். மேலும் ஜெபத்தினைக் குறித்ததான அனைத்து உதவிகளுக்கும் சகோ. சாம் குணசீலன் அவர்களைத் தொடர்பு கொள்ளுங்கள். செல் : 09345675468

**"யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். யோபுக்கு முன் இருந்த எல்லாவற்றைப்பார்க்கிலும் இரண்டத்தனையாய்க் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார்....."** யோபு 42:10

என்ற வசனத்தின்படி ஊழியங்களுக்காக ஜெபிக்க முன் வருகின்ற உங்களுடைய குடும்பம், தொழில், வேலை, ஊழியம், சபைகள் ஒவ்வொன்றையும் தேவன் ஆசீர்வதிப்பாராக!

- **ஊழியங்களுக்காக ஒன்று சேர்ந்து தேவனிடத்தில் ஜெபிப்போம்!**
- **சாத்தானை மிதிப்போம்!!**
- **பீல் ஆதிவாசி மக்களை தேவனுக்குச் சொந்தமாக்குவோம்!!!**
- **இந்திய தேசத்தை சுதந்தரிப்போம்!!!!**

**"என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்."** எரேமியா 33:3

*உங்களுக்காக தேவனிடத்தில் மன்றாடும் உங்கள் அன்பு சகோதரன்,*

(பேராயர் V. தேவதாஸ்)

# உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து

சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

உயிர்த்தெழுந்த உலக இரட்சகராம் இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். இயேசு கிறிஸ்துவின் பிறப்பை எப்படி மகிழ்ச்சியுடன் ஆராதித்து கொண்டாடுகிறோமோ அதைக் காட்டிலும் மிக அதிகமான சந்தோஷமும், ஆர்ப்பரிப்பும் கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்பதை நினைக்கும் போதெல்லாம் உண்டாகவேண்டும். **ஆம்! என் மீட்பர் உயிரோடு இருக்கிறார் என்பது எத்தனை மகிழ்ச்சி!** இந்த மன மகிழ்ச்சி நாளில் உயிர்த்தெழுந்த இயேசுவைப் பற்றி சற்று தியானிப்போம்.

## வேதவாக்கியங்களின்படி உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து

பிதாவாகிய தேவன் ஆதாம் ஏவாள் பிசாசினால் வஞ்சிக்கப்பட்டு பாவத்தில் விழுந்துபோய் தேவ மகிமையை இழந்தபோது அன்றே அவர் ஒரு குமாரனையும் கொண்டு வந்தார். அவர் (இயேசு) உன் குதிங்காலை நசுக்குவார் என்பது, பிதாவாகிய தேவன் மனுக்குலத்திற்கு இரட்சிப்பின் திட்டத்தை தீர்க்கதரிசன வார்த்தைகளாய் கொடுத்தார். காலம் நிறைவேறின போது அவருடைய ஒரே பேரான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இவ்வுலத்திற்கு அனுப்பி இவ்வளவாய் உலகத்தில் அன்புக்கூர்ந்தார். அவர் **பிறப்பு, வளர்ப்பு, ஊழியம், பாடுகள், மரணம் மட்டுமல்ல உயிர்த்தெழுதலையும் வேதவாக்கியங்கள் மூலமாக திருவுளம் பற்றினார்.**

அதைத்தான் உயிர்த்தெழுந்த இயேசு முதலாவது எம்மாவூர் சீஷர்களுக்கு தம்மை வெளிப்படுத்தி அழகாக எடுத்துரைத்தார். **"அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: தீர்க்கதரிசிகள் சொன்னயாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயம் உள்ளவர்களே, கிறிஸ்து இவ்விதமாக பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா என்று சொல்லி, மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதிய வேதவாக்கியங்கள் எல்லாவற்றிலும் தம்மைக் குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்."** (லூக். 24:25–27) என எம்மாவூர் சீஷர்களுக்கு விளக்கி காட்டுகிறார்.

**"அவைகளை அவர் வாங்கி அவர்களுக்கு முன்பாகப் புசித்து, அவர்களை நோக்கி: மோசேயின் நியாப்பிரமாணத்திலும் தீர்க்கதரிகளின் ஆகமங்களிலும், சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகள் எல்லாம் நிறைவேற வேண்டியது என்று, நான் உங்களோடு இருந்த போது உங்களுக்குச் சொல்லிக் கொண்டு வந்த விசேஷங்கள் இவைகளே என்றார். அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்துக்கொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்து அவர்களை நோக்கி; எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்–தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது"** லூக்கா 24:43–46 என மற்ற சீஷர்களுக்கும் கூறுகிறார். மட்டுமின்றி எம்மாவூர் சீஷர்கள் மற்றும் கூடியிருந்த சீஷர்களுடைய மனக்கண்களைத்

திறந்தார். அவர்கள் வேத வாக்கியங்களை அறிந்து புரிந்துகொண்டார்கள் (லூக். 24:31; லூக். 24:45) அவர்கள் வேத வாக்கியங்களை அறிந்துக் கொண்ட பின்பு அவர்கள் மனதிலுள்ள பயங்கள், அவிசுவாசங்கள் எல்லாம் நீங்கியது. கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, நம் வாழ்வில் வேத வாக்கியங்களை நாம் அறிந்து கொள்ள ஆவியானவர் நம் கண்களை திறக்கும் போது தான் நம் வாழ்விலுள்ள பயங்கள், அவிசுவாசங்கள் நீங்கும். தேவனுடைய அன்பும், கிருபையும் சூழ்ந்துகொள்ளும் வேத வசனத்தினால் தேவன் நம்மை பெலப்படுத்துவார்.

## நமக்கு உயிர்த்தெழுதலின் நம்பிக்கையை தரும் இயேசு கிறிஸ்து

வேதம் சொல்லுகிறது **"கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார். மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்குவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்."** (I கொரி. 15:20–22)

இயேசு உயிர்த்தெழுந்தார். மரணத்தையும், பாதாளத்தையும் ஜெயித்தார். **மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே?** அந்த ஆசீர்வாதங்களை, இயேசுவை ஏற்றுக் கொண்ட ஜனங்களுக்கு அவர் தருகிறார். அவர் நாமத்தை ஏற்றுக்கொண்டு, விசுவாசித்து, பாவங்களை அறிக்கை செய்து கிறிஸ்துவுக்குள் புது வாழ்வை ஞானஸ்நானம் மூலமாக அவரை மகிமைப்படுத்தும் ஜனங்களுக்கு மட்டும் தான் இந்த ஆசீர்வாதம். நல்ல கிறிஸ்துவ குடும்பத்தில் பிறப்பதிலோ, சபைக்கு ஒழுங்காக செல்வதிலோ, காணிக்கைகளை ஒழுங்காக கொடுத்து வருவதிலோ இந்த உயிர்த்தெழுதலின் நம்பிக்கையை பெற முடியாது. நான் என்னுடைய அன்பு தாயாரை 40 நாளில் இழந்துவிட்டேன். அவர்கள் தேவன் தம் இல்லத்திற்கு அழைத்துக்கொண்டார். என் வாலிப நாட்களில் பல சூழ்நிலைகள் காரணமாக தனிமையில் தள்ளப்பட்டேன். பல இன்னல்கள், பாடுகளை அனுபவித்தேன். உலக சிற்றின்பங்கள் எனக்கு சமாதானத்தையும் அன்பையும் தரவில்லை. **ஏன் ஆண்டவர் என் அன்புத் தாயரை எடுத்துக் கொண்டார்? என்று அங்கலாய்த்த நாட்கள் அநேகம் உண்டு.**

உலக வாழ்வு வேண்டாம் என விஷத்தையும் குடித்துவிட்டேன். ஆனால் 19ம் வயதில் தேவன் என்னை சந்தித்த போது எனக்கு அற்புத விடுதலை தந்து என்னை பெயர் சொல்லி அழைத்த போது, தேவ சமாதானம், சந்தோஷம் பொங்கி இயேசு என்னோடு வேத வாக்கியங்கள் மூலமாக பேசினார். என் அன்பு தாயார் பரலோகத்தில் இருக்கிறார்கள் நானும் அங்கு போவேன், அவர்களை காண்பேன் இந்த உயிர்த்தெலுதலின் நம்பிக்கையின் பாக்கியத்தை, நான் இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்ட பின்பு தான் பெற்றுக்கொண்டேன்.

எனக்கு அன்பானவர்களே, ஒருவேளை நமக்கு மிக அன்பானவர்களை நாம் இழந்து இருக்கலாம். தேவன் இதை அனுமதித்தார் என நம்முடைய மனம் பேசும்! அநேகர் பேசுவார்கள். ஆனால் நமக்காக உயிர்த்தெழுதலின் நம்பிக்கையை நமக்கு கொடுத்திருக்கிறார் அல்லவா? மாயையான இவ்வுலகத்தில் அவருடைய அன்பு மாறாதது! நித்தியத்திற்கு நம்மை அழைத்துச் செல்லும். இயேசு எனக்காக, நமக்காக ஜீவனை தந்து மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் உயிர்தெழுந்தார்.

## உயிர்த்தெழுந்து பரத்திற்கேறி பரிசுத்த ஆவியை தந்த இயேசு கிறிஸ்து

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து 40 நாட்கள் தம்மை உயிரோடு இருக்கிறவராக காண்பித்தார். அதன் பின்பு அவர் பரத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். ஆண்டவராகிய இயேசு உலகில் வாழும் போது உயிர்த்தெழுந்து அவர் போவதற்குள் இரண்டு ஆசீர்வாதங்களை அவர் கூறினார். முதலாவதாக **"நான் போய் உங்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணுகிறேன்"** (யோவான் 14:3) இரண்டாவதாக, **"நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாய் இருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்."** (யோவான் 16:7)

அப்படியே இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த போது சீஷர்கள் மீது ஊதி பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று கூறினார். மேலும் பெந்தெகோஸ்தே நாளுக்காக காத்திருங்கள் என உரைத்துச் சென்றார். பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொண்ட 120 பேர்கள் உயிர்த்தெழுந்த இயேசுவுக்கு சாட்சிகளாக, இரத்த சாட்சிகளாக விளங்கும் வரை ஊழியம் செய்தார்கள். தங்கள் வாழ்வை இயேசுவுக்காக அர்ப்பணித்தார்கள். அப்போஸ்தல நடபடிகளை வாசித்து பாருங்கள் **"உயிர்த்தெழுந்த இயேசு"** என்ற வார்த்தை பல இடங்களில் வருவதை காண்கிறோம்.

**"அன்றியும் மனத்திரும்புதலும், பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகலத் தேசத்தாருக்கும், அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது."** (லூக்கா 24:47) ஆதி அப்போஸ்தலர் காலத்தில் அவர்கள் பெற்றுக்கொண்ட பரிசுத்த ஆவியின் வல்லமையால் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் சாட்சிகளாய், அற்புத அடையாளங்களை உறுதிப் படுத்தினார்கள். 1991ம் வருடத்தில் ஆரம்பித்த ஷாலோம் ஊழியங்கள் மூலமாக குறிப்பாக, பீல் ஆதிவாசி சுதேச ஊழியங்கள் மூலமாக தேவன் பெரிய காரியங்களைச் செய்து வருகிறார்.

இந்த பாமர ஜனங்கள் மீது ஆவியானவரின் பலத்த வல்லமை ஊற்றப்பட்ட நாள் முதல் ஆத்துமாக்கள் பெருகுகின்றது, சபைகள் வளருகிறது, உயிர்த்தெழுந்த இயேசுவின் நாமம் மகிமைப்படுகிறது. நாமும் கூட பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படும் போது உயிர்த்தெழுந்த இயேசுவின் சாட்சிகளாய் விளங்குவோம். பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொண்டவர்களாய், அனுதினமும் ஆவிக்குரிய வரங்களினால் ஆத்தும ஆதாயம் செய்து சபைகளை வளரச் செய்வோம். **"தேசத்தை தேவனுக்கு சொந்தமாக்குவோம்"**

**"கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்."** (அப். 1:11.)

## Vision India-வின் வாலிபர் சிறப்பு முகாம் – நாக்பூர்



நாக்பூரில் ஆரம்பிக்கப்பட்ட Vision India ஸ்தாபனம் கடந்த 10 வருடமாக வட இந்தியாவிலுள்ள 14 மாநிலங்களில் உள்ள வாலிபர்கள் மத்தியில் சபை பாகுபாடின்றி எழுப்புதல் பணியாற்றி வருகிறது.

எப்படியாவது 5 இலட்ச வாலிபர்களை கிறிஸ்துவுக்காக எழுப்பி 14 மாநிலங்களில் ஸ்தல ஊழியர்களை எழுப்பி தேவனுடைய இராஜ்ஜியத்தை கட்டுவது அவர்கள் நோக்கமாகும். **சகோ.விஜய்** அவர்கள் ஒருங்கிணைப்பாளராக இருக்கிறார். ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு மாநிலத்திலும் சுமார் 6000க்கும் அதிகமான வாலிபர்களுக்கு முகாம்கள் நடத்தி வருகிறார்கள்.

கடந்த ஆண்டில் இராஜஸ்தான் அஜ்மீரில் நடைபெற்ற கூடுகையில் சுமார் 1200 வாலிபர்கள் பங்கு பெற்றார்கள். அதுபோல் மத்தியபிரதேசம் போபாலிலும் சுமார் **1200க்கும் அதிகமான வாலிபர்கள்** பங்குபெற்றார்கள். இவ்விரு முகாம்களிலும் நம் அன்பு **பேராயர். வே.தேவதாஸ்** அவர்கள் செய்தியளித்தார்கள். ஒவ்வொரு முகாமிலும் 400க்கும் அதிகமான வாலிப ஆண்களும் பெண்களும் அபிஷேகம் மற்றும் தரிசனம் பெற்றார்கள்.

கடந்த ஜனவரி 14ம் தேதியன்று மகாராஷ்டிராவிலுள்ள நாக்பூரில் CNI பேராயர் உட்பட அனைத்து மூப்பர்கள் மற்றும் சுயாதீன சபைகள் இணைந்து **"My Life My Choice"** தலைப்பில் சிறப்பு முகாம் ஒழுங்கு செய்தார்கள். இம்முகாமில் சுமார் 1200க்கும் அதிகமான வாலிப ஆண்கள், பெண்கள் பங்குபெற்றார்கள். **"இயேசுவின் சீஷன்" தலைப்பிலும் "சின்னவன் ஆயிரம்"** என்ற தலைப்பிலும் **பேராயர் தேவதாஸ் அவர்கள்** செய்திகளை வழங்கினார்கள். ஒவ்வொரு செய்தியிலும் திரளான வாலிபர்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு கண்ணீருடன் ஒப்புக்கொடுத்தார்கள். நோயிலிருந்தும், பிசாசின் பிடியிலிருந்தும் அநேகர் விடுதலை பெற்றார்கள். விசேஷமாக பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும், ஊழியத்திற்கென தங்கள் அழைப்பையும் பெற்றார்கள். மும்பையிலிருந்து **பாஸ்டர்.டேனியல்** அவர்கள் சிறப்பு ஆராதனை பாடல்கள் நடத்தி செய்திகளை மொழிபெயர்த்தார்கள்.

அன்று இரவு நாக்பூர் போதகர் ஐக்கிய கூட்டத்தில் சுமார் 100க்கும் அதிகமானவர்கள் குடும்பமாக பங்கெடுத்தார்கள். அந்த கூடுகையில் **பேராயர். வே.தேவதாஸ்** அவர்கள் தேவ செய்தியை வழங்கி ஜெபித்தபோது ஆவியானவர் பலத்த வல்லமையாக இறங்கினார். ஷாலோம் ஊழிய சாட்சிகள் மூலமாக பல போதகர்கள் உற்சாகமடைந்து விசுவாசத்தில் பெலப்பட்டார்கள். அனைத்து போதகர்களும் நாக்பூர் சபைகளுக்கும், சபை வாலிபர்களுக்கும் மறக்க முடியாத ஒரு எழுப்புதல் நாள் என சாட்சி கொடுத்தார்கள். தேவனுக்கே மகிமை!

கூட்ட ஒருங்கிணைப்பு : **சகோ. விஜய்** (Vision India, Nagpur)

## *SHALOM - KARUNA BAL VIKAS PROJECT*
## *PERSONALITY DEVELOPMENT TRAINING PROGRAMME*

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் குஜராத், ஹிரோலா மற்றும் இராஜஸ்தான், ஜெரி கிராமங்களில் ஷாலோம் மற்றும் கருணா பால் விகாஸ் இணைந்து நடத்தும் Commpassion Projcect பிள்ளைகளுக்கென்று Personality Development Training Programme **பிப்ரவரி மாதம் 28ம் தேதி** குஜராத், தாகோத்தில் நடைபெற்றது. இந்த பயிற்சி பிள்ளைகள் ஆவிக்குரிய வளர்ச்சியுடன் தங்களைப் பற்றியும், தங்களுடைய உடைமைகள் மற்றும் உரிமைகளைக் குறித்து ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக ஒழுங்கு செய்யப்பட்டது. இந்த பயிற்சியில் 8ம் வகுப்பு, 9ம் வகுப்பு மற்றும் 10ம் வகுப்பு படிக்கும் பிள்ளைகள் மொத்தம் 29 பேர் மற்றும் மூன்று Projcect - ஐ சேர்ந்த 48 பணியாளர்களும் பங்கு பெற்றனர்.

ஜெரி கிராம Projcect இயக்குநர் **சகோ. ஜெயராஜ்** அவர்கள் ஜெபித்து ஆரம்பித்தார்கள். **சகோ. ஃப்ராங்க்ளி**ன் அவர்கள் பிள்ளைகளை அபிநயப் பாடல்களை பாட வைத்து உற்சாகப்படுத்தினார்கள். தொடர்ந்து ஆராதனை நடத்தப்பட்டது. அதன்பின் **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்கள் **"ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும், ஆவியிலும் பெலன் கொண்டது போல நாமும் எல்லாவற்றிலும் விருத்தியடைந்து ஆவியில் பெலன் கொள்ள வேண்டும்"** என்று செய்தியளித்தார்கள். அதன்பின் **சகோ. டேனியல் ஆஸ்வால்ட்** அவர்கள் ஒழுக்கம் மற்றும் நடக்கை ஆகியவற்றைக் குறித்து பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுத்தார்கள். அதன்பின் **சகோ. கார்த்திக்** அவர்கள் Individual Self Concept, Self Evaluation & What About Us என்ற தலைப்புகளில் பயிற்றுவித்தார்கள். அதன்பிறகு **திருமதி. ஷாரோன் கேரட்** அவர்கள் **"பிள்ளைகளுடைய எதிர்கால திட்டங்களைக் குறித்தும், அவற்றை அடைய என்ன செய்ய வேண்டும்"** என்றும் கற்றுக் கொடுத்தார்கள். பிள்ளைகளை உற்சாகப்படுத்தும்படியாக அவர்களுக்கென்று விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. **"இந்த முகாமில் பிள்ளைகள் மட்டுமல்ல பணியாளர்களும் அநேக காரியங்களைக் கற்றுக் கொண்டதுமட்டுமல்லாமல் அவற்றை வாழ்க்கையில் செயல்படுத்துவோம் என்ற நோக்கத்துடன் திரும்பினர்".**

## ` ôúXôm 24 U ¦ úSW Ne ¡ - j ùRôPo ù_Tm
## (Chain Prayer)

| | |
|---|---|
| நாள் : **21.04.2012 (சனிக் கிழமை)** | நேரம் : **12.00 A.M. to 12.00 A.M**<br>**24** மணி நேரம் |

சங்கிலித் தொடர் ஜெபத்தில் இணைந்து **1** மணி நேரம் ஜெபிக்கும்படியாக பெயர் கொடுத்தவர்களுக்கு ஜெபக்குறிப்புகள் அனுப்பிவைக்கப்படும். அவர்கள் தங்கள் இடத்திலேயே இருந்து ஜெபிப்பார்கள்.

## தேர்வெழுதும் பீல் ஆதிவாசி மாணவர்களுக்கான விசேஷித்த ஜெபம்

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் மத்தியப்பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் மாநிலங்களிலுள்ள ஷாலோம் சபை ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளின் பிள்ளைகளில் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதும் மாணவ மாணவியருக்கு விசேஷித்த பிரார்த்தனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதில் மத்தியப்பிரதேச மாணவர்களுக்கு **பிப்ரவரி 19ம் தேதி** தாகோத்திலுள்ள பயிற்சி மையத்தில் வைத்து நடைபெற்றது. இதில் 353 மாணவ மாணவியர் பங்கு பெற்றனர். **சகோ. கார்த்திக்** அவர்கள் தேவ செய்தியளித்தார்கள். அதே போல் இராஜஸ்தானிலுள்ள மாணவர்களுக்கென்று **மார்ச் மாதம் 4ம் தேதி** பிஜல்பூரில் வைத்து பிரார்த்தனை நடைபெற்றது. இதில் 218 மாணவ மாணவியர் பங்கு பெற்றனர். இந்தக் கூடுகையில் **சகோ. ஜெயராஜ்** அவர்கள் தேவ செய்தியளித்தார்கள்.

இந்த இரண்டு கூட்டங்களிலும் கலந்து கொண்ட மாணவர்கள் பாடல்களுடன் தேவனைத் துதித்துப் பாடி பக்தியோடு ஆராதனை செய்தார்கள். **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்கள் மாணவர்கள் தேர்வு எழுதுவதற்கு முன் என்னென்ன காரியங்களில் ஆயத்தப்பட வேண்டும் என்று ஆலோசனைகள் வழங்கினார்கள். பங்கு பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் பேனாக்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. மேலும் இறுதியில் அவர்களுக்கென்று தனித்தனியாக சிறப்புப் பிரார்த்தனைகள் ஏறெடுக்கப்பட்டன. மாணவர்கள் அனைவரும் **தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற்று வெற்றிபெறுவோம்** என்று விசுவாசித்து திரும்பிச் சென்றனர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## COMPASSION PROJECT (ù_¬) Uô Q YoL ° u Lp®f Ñt ßXô

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் கடந்த பிப்ரவரி மாதம் 16ம் தேதி நமது Compassion Jeri Project சிறுவர்களுக்கென்று கல்விச் சுற்றுலா ஒழுங்கு செய்யப்பட்டது.

அதன்படி Shalom Charity Mission Director **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்கள் மற்றும் Project Director **சகோ. திவாகர்** அவர்கள் தலைமையில் சுமார் 75 சிறுவர்களும் 8 பணியாளர்களும் குஜராத், அகமதாபாத்திலுள்ள காங்கரியா என்ற மிருகக்காட்சி சாலை மற்றும் பூங்காவிற்குச் சென்றனர். இதில் தேவன் விதவிதமான படைத்த மிருகங்கள், பறவைகள் மற்றும் மீன்கள் போன்றவற்றை முதன் முதலாக இந்தச் சிறுவர்கள் கண்டு தேவனை மகிமைப் படுத்தினார்கள். அதன்பின் மதிய நேர உணவிற்காக அனைவரும் தேவனுக்கு நன்றி செலுத்தி உண்டனர்.

அதன்பின் சிறுவர்களுக்கென்று இயக்கப்படும் உல்லாச இரயிலில் பயணம் செய்தபோது அனைவரின் முகங்களிலும் எல்லையில்லா சந்தோஷத்தைக் காண முடிந்தது. அதன்பின் இதுவரைக்கும் தங்கள் கண்களால் ஏரியை மட்டும் பார்த்த சிறுவர்கள் முதன் முதலாக நீரின் மீது படகினில் சென்று பரவசம் அடைந்தார்கள். அதன்பின் கண்காட்சியில் இவ்வுலகில் உள்ள அனைத்து நாடுகளின் நாணயங்களையும் கண்டு வியந்தனர். **நமது பீல் ஆதிவாசி சிறுவர்கள் இதுவரை கேள்விப்பட்ட அனைத்தையும் நேரில் காண கிருபை செய்த தேவனுக்கு நன்றி கூறுகிறோம்!** மேலும் Caruna Bal Vikas நிறுவனத்திற்கும் நன்றி கூறுகிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

# ஷாலோம் பணித்தளங்களில் நேரில் கண்ட ஆச்சரியமான நிகழ்வுகள்

**Pr.** GhYoh NômWôw (W.M.E. Church, Tuticorin)
**Pr.** Wô_ôWôm (A.G. Church, Tuticorin)

கர்த்தருடைய பெரிதான கிருபையினாலும் இரக்கத்தினாலும் குஜராத்திலும், இராஜஸ்தானிலும், மத்தியபிரதேசத்திலும் உள்ள பீல் ஆதிவாசிகள், பழங்குடி மக்கள் மத்தியில் ஷாலோம் மிஷனெரி ஸ்தாபன ஸ்தாபகர் அப்போஸ்தலர் **பிஷப். V. தேவதாஸ்** அவர்களும், அவர்கள் துணைவியார் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களும் 22 ஆண்டுகளாக தேவன் கொடுத்த தரிசனத்தின்படி, பாரத்தின்படி தங்களை முற்றிலுமாக அவ்வூழியத்திற்கு அர்ப்பணித்து, மிகுந்த பாடுகள், கஷ்டங்கள், எதிர்ப்புகள் மத்தியிலும் கர்த்தருக்காக உண்மையுடனும் உத்தமத்துடனும் மிகுந்த ஜெபத்துடனும் மிகுந்த ஆத்தும பாரத்துடன் ஊழியத்தை நிறைவேற்றி வருவதை நேரில் கண்டு ஆச்சரியப்பட்டு கர்த்தரை மிகவும் துதிக்கிறோம். மேலும் ரோமர் 15 : 18,19 வசனங்களின்படி இவர்களின் கடின ஊழியத்தினால் கர்த்தர் கொடுத்த பீல் ஆதிவாசிகளின் ஆத்தும அறுவடையை கண்டு கர்த்தரை நன்றியுடன் துதிக்கிறோம். ஒவ்வொரு பீல் ஆதிவாசி கிராமங்களிலும் தேவ சபைகளை கட்டி வருகிறார்கள். (அப் 2:47) **"இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்"** என்ற வசனத்தின்படி, ஒவ்வொரு கிராமத்திலும் கர்த்தர் ஜனங்களை இரட்சித்து சபைக்கு கொண்டு வந்துகொண்டிருக்கிறார். பயங்கரமான பாவ பழக்கங்களிலிருந்து ஜனங்கள் இரட்சிக்கப்பட்டு ஆவியுடனும் உண்மையுடனும், முழு பெலத்தோடு கர்த்தரை நேசித்து நடனம் ஆடி பல மணி நேரங்கள் ஆராதிப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டோம். பல்லாயிரக்கணக்கான மக்கள் பிசாசின் பிடியிலிருந்தும், பாவ கட்டுகளிலிருந்தும் வியாதியின் கட்டுகளிலிருந்தும், மந்திரவாத கட்டுகளிலிருந்தும் விடுதலையாகி ஜீவனுள்ள தேவனை ஆராதிக்கிறதைக் கண்டு பரவசமடைந்தோம்.

09–03–2012 வெள்ளிக்கிழமை அன்று குஜராத்தில் தாகோத் மாவட்டத்திலுள்ள பாரேவா சபையாரை சந்திக்க தேவன் கிருபை தந்தார். ஹோலி, துலாட்டி போன்ற பண்டிகை நாட்களாக இருந்தபடியால் குடிகாரர்கள், சண்டை போட்டு பொருட்களை அபகரிப்பவர்கள் கூட்டங்களின் மத்தியிலும் தேவ பாதுகாப்புடன் செல்ல தேவன் கிருபை தந்தார். இந்த கிராம ஆலயம் அன்பு சகோதரர் **மோகன் சி. லாசரஸ்** அவர்கள், இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தின் மூலமாக கட்டிகொடுக்கப்பட்ட 100வது கிராம ஆலயமாகும். **போதகர் ஹவ்சிங் சங்காடா** மற்றும் சபையார் கலாச்சார வரவேற்பு தந்து உற்சாகப்படுத்தினார்கள். பாடல், ஆராதனை மிகவும் சிறப்பாக இருந்தது. அங்கு கர்த்தருடைய வார்த்தையை பகிர்ந்துகொண்டோம். கர்த்தருடைய பந்தி ஆசீர்வாதமாக இருந்தது.

பின்பு கொலானா கிராம சபையை சந்திக்கவும் தேவன் கிருபை தந்தார். போதகர் **மசூர் கணாவா** அவர்கள் உற்சாக வரவேற்பு அளித்தார்கள். அதுபோல வாங்கோல் திருச்சபையை சந்திக்கவும், போதகர் **சாம்சன் டோடியார்** அவர்களை சந்திக்கவும் தேவன் கிருபை தந்தார். குஜராத் ஆலயங்களைக் கண்டு தேவனை துதித்தோம்.

**10.03.2012** சனிக்கிழமை அன்று குஜராத்தின் முதல் ஷாலோம் பணித்தளம் மற்றும் முதல் ஷாலோம் ஆலயமான **ஹிரோலாவை** காண தேவன் கிருபை தந்தார். அங்கு ஷாலோ ஊழியங்களும் & CARUNA BAL VIKAS ஸ்தாபனமும் இணைந்து செயல்படுத்திவரும் Children Development Project மூலம் **300**க்கும் அதிகமான பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட்டு வருகிறார்கள். கல்வியறிவும், ஆன்மீக அறிவும் பெற்று கிராமத்திற்கும், சபைக்கும், தேசத்திற்கும் ஆசீர்வாதமாக இருப்பது மகிழ்ச்சியாக உள்ளது. சபை போதகர் **அணில் கணாவா** அவர்கள் ஆதிநாட்களில் ஊழியப்பாதைகளை பற்றியும் கடந்து வந்த பாதைகளை குறித்து சாட்சியாக கூறினார்கள். கர்த்தர் செய்த காரியங்களுக்காக தேவனுக்கு நன்றி கூறுகிறோம்.

அன்று இராஜஸ்தான் மாநிலத்திற்கு செல்லும் வழியில் **1991** ல் ஷாலோம் ஊழியங்கள் ஆரம்பிக்கப்பட்ட ஜாலோத் பங்களாவை கண்டோம். நிச்சயமாக **சகோ.தேவதாஸ்** அவர்கள் மூலமாக அற்பமாக ஆரம்பிக்கப்பட்ட தரிசனப்பணிகளை நினைவுகூர்ந்து நன்றி கூறுகிறோம். **1997**ம் ஆண்டு நிதி உதவியின்றி **2.5** இலட்சம் பணத்தேவையில் இருக்கும் போது, ஆவியானவர் தாமே அன்பு **சகோ. D.G.S.தினகரன்** அவர்கள் மூலமாக முழு தேவையை சந்தித்ததின் மூலமாக வாங்கப்பட்ட முதல் மிஷனெரி இல்லத்தினைக் கண்டு தேவனைத் துதித்தோம்.

இராஜஸ்தானில் **கும்புரா** என்ற கிராமத்திலுள்ள ஷாலோம் ஆலயத்தில் போதகர் **பத்தியா கராசியா** அவர்கள் சபையை சந்தித்து தேவ செய்தியை பகிர்ந்து கொள்ள தேவன் கிருபை தந்தார். அந்த கிராமத்தில் சகோதரர். **மோகன் சி.லாசரஸ்** வந்த நற்செய்தி கூட்டங்கள் நடத்திய போது ஏற்பட்ட பயங்கரமாக எதிர்ப்புகள், மருத்துவ முகாம் நடத்தும் போது ஏற்பட்ட இன்னல்கள் எல்லாவற்றையும் கடந்து வந்த பாதைகளை கூறும் போது இன்று பாடுகளுக்கு பதிலாக **120** குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டதும், போதகர் **பத்தியாபாய்** கிராம பஞ்சாயத்து தலைவராகவும் இருந்து நல்ல காரியங்களை நடத்தி வருகிறதை எண்ணி தேவனை துதிக்கிறோம். அதேபோல், **பேடவ்** கிராம சபையாரையும், போதகர் **பாதர் டோடியார்** அவர்களையும் சந்திக்க தேவன் கிருபை தந்தார். அதுமட்டும் அல்லாமல் இராஜஸ்தான் ஒருங்கிணைப்பாளர் **சகோ. கேரட்** அவர்களையும் சந்திக்க தேவன் கிருபை செய்தார்.

மேலும் **14.03.2012** அன்று இராஜஸ்தானிலுள்ள பிஜல்பூர் ஷாலோம் பள்ளி மற்றும் விடுதியை பார்வையிட்டு, மாணவர்களுக்கு சிறப்பு நிகழ்ச்சிகளை **(Pr. Rajaram (A.G.Church, Tuticorin)** அவர்கள்) நடத்தவும், தேவனுடைய வார்த்தையை பகிர்ந்து கொள்ளவும் தேவன் கிருபை செய்தார். மாணவர்களும் தேவனை முழுமனதுடன் துதித்து ஆராதிப்பது மிக்க மகிழ்ச்சியாக

இருந்தது. ஆதிவாசிப் பிள்ளைகள் படிக்க வசதி அற்றவர்கள். இன்று 300க்கும் அதிகமானவர்கள் 8வது வகுப்பு வரை ஷாலோம் பள்ளியில், விடுதியில் இருந்து படித்து ஆசீர்வாதமாக உள்ளார்கள். இன்னும் பல ஷாலோம் பள்ளிகள், கல்லூரிகள் எழுப்பப்பட, நாம் ஜெபிப்போம், உழைப்போம்.

**மத்தியபிரதேசம், அந்தர்வேலியா கிராம ஆலயம் – போதகர் பூர்சன்பூரியா**

**11.03.2012** ஞாயிற்றுகிழமை அன்று மத்தியப்பிரதேசத்திலுள்ள அந்தர்வேலியா கிராமத்திற்கு சென்றோம். அங்கு ஊழியத்தின் ஆரம்ப நாட்களில் ஊழியத்தின் பாதையில் 2002ல் ஜீப் எரிக்கப்பட்டது, வீடுகள் உடைக்கப்பட்டது போன்ற பல பாடுகள் மத்தியிலும் தேவனுடைய ஊழியத்தை செய்ததன் விளைவாகள, தேவன் இந்த ஊழியத்தை ஆசீர்வதித்து தற்போது அந்தர்வேலியாவை சுற்றி 30 சபைகளை தேவன் தந்து மகிமைப்படுத்தி வருகிறார். போதகர் **பூர்சன்பூரியாவின்** குடும்பத்தார் எங்களுக்கு அன்போடு வரவேற்பு கொடுத்தார்கள். இங்கு தேவன் மிக அழகான ஆலயத்தை கட்டித் தந்துள்ளார். இங்கும் Children Development Project மூலமாக 200க்கும் அதிகமாக பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட்டு வருகிறார்கள்.

**மேந்திகேடா ஷாலோம் கிராம சபை& ஞானஸ்நானம் – போதகர் பாலுசிங் பாரியா**

அதற்கு பின்பு மேந்திக்கேடா சபைக்கு சென்று போதகர் **பாலுசிங் பாரியாவை** சந்தித்தோம். அங்கு நடந்த ஆராதனையில் பங்கு பெறவும் தேவ வார்த்தை அளிக்கவும் தேவன் உதவினார். ஆராதனை மிகவும் சிறப்பாக உற்சாகமாக இருந்தது. ஆராதனைக்கு அங்குள்ள அனாஸ் என்ற நதியில் **80 புதிய விசுவாசிகள் ஞானஸ்நானம்** எடுத்ததை பார்த்த போது இயேசு யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்றதைப் போன்ற மகிமையான காட்சியாக இருந்தது. அந்த 80 விசுவாசிகளும் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற்று ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

**முண்டத், ம.பி., ஷாலோம் கிராம ஆலய பிரதிஷ்டை**

**11.03.2012** முண்டத் ஆலய பிரதிஷ்டை ஆராதனையில் பிஷப் தேவதாஸ் அவர்களோடு பங்கு பெற்றது மிகவும் சிறப்பாக இருந்தது. இதில் 1000 நபர்கள் கூடுகிறார்கள். 3 கிளை சபைகள் இருக்கிறது. உற்சாகத்துடன் கலாச்சார வரவேற்பு கொடுத்தார்கள். சிறப்பாக 20க்கும் அதிகமான பேர் சாட்சிகள் கூறினார்கள். கடந்த வாரம் தாங்கள் ஜெபித்தபோது தேவன் செய்த நன்மைகளை கூறி ஸ்தோத்திர காணிக்கையை படைத்தார்கள். தேவ செய்தியை (**Pr. Edward Samraj** (W.M.E. Church, Tuticorin)அவர்கள்) பகிர்ந்து ஜெபிக்கும் போது பரிசுத்த ஆவியானவர் அபரிமிதமாக இறங்கி வந்தார். அநேகர் விடுதலையையும், அற்புதத்தையும் பெற்று பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தையும் பெற்றார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**குந்திகேடா, குஜராத் ஷாலோம் கிராம ஆலயம்**

**12.03.2012** திங்கட்கிழமை அன்று மூப்பர்கள் கூடுகையில் பங்கு பெற்றோம். இதில் 11 போதகர்கள், 14 சபைகள், மூப்பர்கள் பங்கு பெற்றார்கள். கர்த்தருடைய வார்த்தையை **(Pr. Edward Samraj அவர்கள்)** வழங்க தேவன் கிருபை செய்தார். இந்த வாரத்தில் 7 இடங்களில்

**100** கிராம சபை மூப்பர்களையும், **82** சுதேச ஊழியர்களையும் **பிஷப். தேவதாஸ்** அவர்கள் சந்திப்பதே சபை வளர்ச்சிக்குக் காரணமாகும்.

**Shalom Mission All Night Prayer**

நாங்கள் Shalom Mission All Night Prayer யில் பங்குபெற்றோம். தேவ பிள்ளைகளோடு ஜெபித்தது எங்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாக இருந்தது. பணித்தள அலுவலர்கள் மற்றும் முக்கியமான ஊழியத் தலைவர்கள் இணைந்து ஜெபிக்கவும், **(Pr. Edward Samraj அவர்கள்)** ஜெபத்தை பற்றிய செய்தியளிக்க தேவன் கிருபை செய்தார்.

**புது ஊழியர் பயிற்சி**

இவ்வருடம் **500** ஊழியர்களை உருவாக்கும் திட்டத்தில் தேவன் **42** புதிய ஊழியர்களை எழுப்பியுள்ளார். மிகுந்த அர்ப்பணிப்புடன் பயிற்சி பெறும் இவர்களுக்காக தேவனை துதிக்கவும், நாங்கள் வேதாகமப் பயிற்சி கொடுக்கவும் தேவன் கிருபை தந்தார்.

**Shalom Field Office**

Shalom Field Office -யில், Morning Devotion ல் செய்தி அளிக்க தேவன் கிருபை செய்தார். அனைத்து ஊழியர்களும் நேர்த்தியாக மற்றும் உற்சாகமாக தேவ தரிசனப் பணியிலிருந்து செயல்படுவது மிகுந்த சந்தோஷத்தை தந்தது.

ஆக 5 நாட்கள், ஒரு மிஷனெரி பணித்தளத்திற்கு வந்து பார்வையிட்டு ஊழியம் செய்தது எங்களால் மறக்க முடியாது. அநேக காரியங்களை ஊழியப் பாதையில் நாங்களும் கற்றுக்கொண்டோம். தேவன் எங்களை சரியான Needy Land Tour க்கு கொண்டுவந்தார் என பிரயாசத்துடன் தேவனைத் துதித்தோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! பிஷப் தேவதாஸ் அவர்கள் 10 இலட்சம் பீல் ஆதிவாசிகளை இரட்சிப்புக்குள் நடத்தி 1000 சபைகளை கட்டவேண்டும் என்ற மிகுந்த வாஞ்சையோடு தீவிரமாக ஊழியம் செய்து வருகிறார்கள். 10,000 சிறுவர்களுக்கு உதவி செய்து அவர்களையும் சிறுவயதிலே ஜீவனுள்ள தேவனை அறிய வைக்கவேண்டும் என்ற பாரத்தையும் பெற்றிருக்கிறார்கள். ஆகையால் இதனை கேள்விப்படுகிற நீங்கள் இந்த அருமையான ஷாலோம் மிஷனெரி ஊழியத்திற்காக தனியாக, குடும்பமாக, சபையாக ஜெபிக்கவும், உபவாசிக்கவும், உற்சாகமாகக் கொடுக்கவும், **"அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்."** (2 கொ.9:7) என்ற வசனத்தின்படி அன்புடன் வேண்டிக்கொள்கிறோம். இவ்வூழியத்திற்கு கோடிக்கணக்கான பணம் தேவைப்படுகிறது. நீங்களும் உங்களால் இயன்றவரை இவ்வூழியத்தைத் தாங்குங்கள். கர்த்தர் இதற்குரிய பலனை நிறைவாய் உங்களுக்கு **"ஈசாக்கு அந்தத் தேசத்தில் விதை விதைத்தான்; கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறுமடங்கு பலன் அடைந்தான்"** ஆதி. 26:12 என்ற வசனத்தின்படி தந்தருள்வாராக. ***ஆமென்!***

**- Pr. Edward Samraj** (W.M.E. Church, Tuticorin) **Pr. Rajaram** (Shalom A.G.Church, Tuticorin)

## *Pr.* எட்வர்ட் சாம்ராஜ் (W.M.E. சபை, தூ–டி) & *Pr.* ராஜாராம் (ஷாலோம் A.G. சபை, தூ–டி) ஆகியோரின் பணித்தள வருகை

*(2012, மார்ச் 9 to 13)*




முண்டத் M.P. கிராம ஆலய பிரதிஷ்டை



கலாச்சார வரவேற்பு



கும்புரா சபையில் செய்தி வேளை




மேந்திகேடா M.P. –ல் 80 பேருக்கு நடைபெற்ற ஞானஸ்நான ஆராதனை

## Personality Development Training Programme - 28.02.2012




தேவ செய்தி & ஆலோசனைகள் வழங்கும்
சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள்



மாணவர்களுக்கு பயிற்சியளிக்கும் சகோ. கார்த்திக் அவர்கள்

## ஆவிக்குள் புதுப்பித்தல் மாநாடு - பாட்னா, பீஹார் (20&21-பிப்ரவரி-2012)



தேவ செய்தி : பிஷப் தேவதாஸ் அவர்கள்


அபிஷேக வேளை





கலந்து கொண்ட தேவ பிள்ளைகளுடன் Rev. S.D. பொன்ராஜ் மற்றும் பிஷப் V. தேவதாஸ் அவர்கள்

## வாலிபர் கூடுகை - நாக்பூர்


தேவ செய்தி : பிஷப் தேவதாஸ் அவர்கள்


சகோ. விஜய் (விஷன் இந்தியா, நாக்பூர்) அவர்களுடன்
பிஷப் தேவதாஸ் அவர்கள்




கலந்து கொண்ட திரளான வாலிபர்கள்



# CBC - CHILDREN BIBLE CLASS - 2012

தேவனுக்கே மகிமை!

பிரியமானவர்களே, நமது ஷாலோம் பணித்தளங்களிலுள்ள பீல் ஆதிவாசி சிறுவர்களை தேவன் மிகவும் நேசித்து, தமது கிருபையால் ஆசீர்வதித்து, அவர்களை ஞானத்தினால் நிரப்பி கல்வி அறிவை தந்து வருகிறார். மேலும் அவர்கள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சராக ஏற்றுக் கொண்டு வேத அறிவிலும் வளர்ந்து வருகின்றனர். இந்த சிறுவர்களை ஸ்திரப்படுத்தும்படியாக ஒவ்வொரு ஞாயிறு அன்றும் நமது ஷாலோம் திருச்சபைகளில் ஞாயிறு வேத பள்ளிகளும், சிறுவர் மற்றும் வாலிபர்களுக்கான சிறப்பு முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும் ஒவ்வொரு ஆண்டும் பள்ளி விடுமுறைநாட்களாகிய மே மாதத்தில் சிறுவர் வேதாமப் பள்ளி (CBC - Children Bible Class) நடத்தப்பட்டு வருகிறது. இந்த பள்ளிகளில் ஆயிரமாயிரம் சிறுவர்கள் பங்கு பெற்று ஆசீர்வாதம் பெற்று வருகின்றனர். கடந்த 2011ஆம் ஆண்டில் "ஜீவ வார்த்தை" என்ற தலைப்பில் 30000 சிறுவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டனர். இதற்கான தேவைகளை சந்தித்து வரும் பங்காளர்களாகிய உங்கள் யாவருக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

அதே போல் இந்த ஆண்டும் "எனது அழகான இருதயம்" என்கின்ற தலைப்பில் 30000 சிறுவர்களுக்கு 600 கிராமங்களில் CBC நடத்த ஜெபத்துடன் செயல்பட்டு வருகிறோம். இதற்கான தேவைகள் 600 ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கையேடுகள், 30000 CBC புத்தகங்கள், Badge. (30000), பாட்டுப் புத்தகங்கள் (10,000), கலர் பென்சில்கள், பேனாக்கள் (5000 Sets), CBC புத்தகங்கள் நேர்த்தியாக பிரிண்ட் செய்யவும், மற்ற பொருட்கள் வழங்கவும் ஒரு குழந்தைக்கு தலா ரூ. 10/– வீதம் 30000 குழந்தைகளுக்கு ரூ. 3 இலட்சம் தேவைப்படுகிறது. இந்தத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். மேலும் உங்கள் குடும்பத்தின் சார்பிலோ, ஊழியத்தின் சார்பிலோ அல்லது சபையின் சார்பிலோ ஒரு குழந்தைக்கு ரூ. 10/– வீதம் உங்களால் முடிந்த அளவிலான குழந்தைகளுக்கு கொடுத்து இந்த சிறுவர் ஊழியத்தைத் தாங்க முன்வாருங்கள்.




CBC பயிற்சி புத்தகங்கள்

**தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தின் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக!**

**"சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்;"**

மத்தேயு 19:14

## ஷாலோம் மருத்துவ முகாம்கள் - 2012, பிப்ரவரி 20 முதல் 24 வரை


மருத்துவ ஆலோசனை வழங்கும் Dr. Abel அவர்கள்


நோயாளியை பரிசோதிக்கும் Dr. Inba அவர்கள்


மருந்து, மாத்திரைகள் விநியோகிக்கப்படுகின்றன


மருத்துவத்திற்காக காத்திருக்கும் நோயாளிகள்

## Compassion Project (ஜெரீ) மாணவர்களின் கல்விச் சுற்றுலா - 16.02.2012


சுற்றுலா சென்ற மாணவர்கள்


பூங்காவினில் மகிழ்ச்சியுடன் விளையாடும்
நமது பீல் ஆதிவாசி சிறுவர்கள்

## தேர்வெழுதும் பீல் மாணவர்களுக்கான சிறப்பு ஜெபக் கூடுகைகள்


பங்குபெற்ற மாணவர்களுக்கு தனித்தனியே ஜெபம் ஏறெடுக்கப்படுகிறது


கூடியிருந்த மாணவர்கள்

# ஷாலோம் மருத்துவ முகாம் 2012

பிரியமானவர்களே, நமது பணித்தளங்களிலுள்ள மிகவும் ஏழ்மையிலுள்ள மருத்துவ வசதி இல்லாத நமது பீல் ஆதிவாசி ஜனங்களுக்காக ஒவ்வொரு ஆண்டும் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன, இதில் அநேக ஜனங்கள் பயன் பெற்று வருகின்றனர். அதே போல் இந்த ஆண்டும் கடந்த பிப்ரவரி மாதம் 20ம் தேதி முதல் 24ம் தேதி வரை இந்த மருத்துவ முகாம் நடைபெற்றது. இந்த முகாம் **Dr. Abel** அவர்கள் தலைமையில் **Dr. Jolly Abel, Dr. Inba, Sis. Angel, Sis. Vanaja, Sis. Augusta** ஆகியோரைக் கொண்ட மருத்துவக் குழுவினரால் நடத்தப்பட்டது.

இந்தக் குழுவினர் 19ம் தேதி பணித்தளத்திற்கு வந்து சேர்ந்தனர். 20ம் தேதி தாகோத்திலுள்ள நமது மிஷன் மருத்துவமனையில் நடைபெற்ற முகாமில் 230 நோயாளிகளும், 21ம் தேதி சோட்டா உதய்பூரில் உள்ள தேவ்கட் கிராமத்தில் நடைபெற்ற முகாமில் 160 நோயாளிகளும், 22ம் தேதி மத்தியப்பிரதேசம் மாநிலத்திலுள்ள அந்தர்வேலியா கிராமத்தில் நடைபெற்ற மருத்துவ முகாமில் 205 நோயாளிகளும், 23ம் தேதி இராஜஸ்தானிலுள்ள கும்புரா கிராமத்தில் நடைபெற்ற மருத்துவ முகாமில் 200 நோயாளிகளும் பங்கு பெற்று பயனடைந்தனர். இந்த 4 மருத்துவ முகாம்களையும் **சகோ. ஜெயராஜ்** அவர்கள் பொறுப்பேற்று நடத்தினார்கள்.

இந்த முகாம்களில் நோயாளிகள் பேசுவதை **சகோ. வாலஸ், சகோ. ஸ்டீபன், சகோ. காமேஷ் மற்றும் சகோதரி. எபனேசர் டேவிட்** ஆகியோர் மொழியாக்கம் செய்ய **Dr. Abel & Dr. Inba** ஆகியோர் நோயாளிகளை பரிசோதித்து சிகிச்சை அளித்தனர். **சகோதரி. ஏஞ்சல், சகோதரி. வனஜா, சகோதரி. அகஸ்டா மற்றும் சகோ. சுனில்** ஆகியோர் மருந்துகள் வழங்குவதில் உதவி செய்தனர். மற்ற காரியங்களில் நமது பணித்தள ஊழியர்கள் உதவி செய்தனர். **இந்த முகாமில் பங்கு பெற்ற அனைத்து நோயாளிகளும் நல்ல சுகம் பெற்று பயனடைந்தனர்.**

பீல் ஜனங்கள் மீது அன்பு வைத்து வருடந்தோறும் நமது பணித்தளத்திற்கு வருகை தந்து மருத்துவ சேவை செய்கின்ற மருத்துவக் குழுவினருக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். தேவன்தாமே இவர்களை பல மடங்கு ஆசீர்வதிப்பாராக! எல்லாவற்றிற்கும் மேலாக காரியங்களை வாய்க்கச் செய்த தேவனுக்கு மகிமை செலுத்துவோமாக!

ஜெபியுங்கள்! பங்கு பெறுங்கள்!!


## Yôd Ï jRjR Bº oYôRd áÓûL

| நாள் : **02.04.2012 (திங்கள்)** | நேரம் : **காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை** |
|---|---|

இடம் : **தலைமை அலுவலகம் அன்பு பகிர்வு இயக்கம்,**
5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 628 008.

தேவ செய்தி : **Prof. C.S. கிறிஸ்டோபர்,** பாளையங்கோட்டை

# ஆவிக்குள் புதுப்பித்தல் மாநாடு



ஒருங்கிணைப்பாளர் : **Rev. Dr. S.D. பொன்ராஜ்,**
**(பீஹார் கிறிஸ்தவ திருச்சபை - பாட்னா)**

நாட்கள் : **20,21 பிப்ரவரி - 2012**

பீஹார் கிறிஸ்தவ திருச்சபை மூலமாக நடத்தப்பட்ட இந்த **"ஆவிக்குள் புதுப்பித்தல் மாநாடு" ஆவிக்குரிய எழுச்சியை பங்கு பெற்றோருக்குத் தந்தது.** இதில் திருச்சபை மூப்பர்கள் 200 பேரும், போதகர்கள் 40 பேரும், சபை கட்டுவோர் 70 பேரும், நிர்வாக பொறுப்புகளிலுள்ளோர் 10 பேரும் மொத்தம் 320 பேர் கலந்து கொண்டனர். இந்த கூடுகை தேவன் சந்திக்கும் நேரம் எனவும், இது ஒரு புதுவிதமான அனுபவம் எனவும் தலைவர்களும், மூத்த போதகர்களும் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்தினர்.

தேவன் இந்த இரண்டு நாட்களிலும் கூடியிருந்த அனைவரையும் உண்மையாகவே சந்தித்தார். அவர் யோவேல் 2:28,29 வசனங்களில் கூறியபடி இதில் கலந்து கொண்ட அனைவர் மீதும் தமது ஆவியை பொழிந்து ஆசீர்வதித்தார். தேவன் நமது ஷாலோம் **பிஷப் V. தேவதாஸ்** அவர்களை வல்லமையாக பயன்படுத்தினார். அவர் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில் அவர் நமக்கு முன்மாதிரியாக வைத்துப் போன காரியங்களை நினைவுபடுத்தினார். அவருடைய முக்கிய கேள்வி என்னவென்றால் தேவன் தமது ஆவியில் நம்மை நிரப்பிட தீவிரமாய் வந்திருக்கும்போது, நாம் எவ்வளவு அதிகமாய் ஆவியில் நிரப்பப்படுவதற்கு ஆயத்தமாக இருக்கவேண்டும் என்பதே. மேலும் பிஷப் அவர்கள் அப்போஸ்தலர் நடபடிகளில் முன்னாள் திருச்சபை எப்படி இருந்தது என்பதை போதித்தார்கள்.

ஆவியால் நிரம்பிய சபை, நாம் பின்பற்றக்கூடிய மாதிரியான சபை என்பதை விளக்கினார். இந்த இரண்டு போதனைகளின் அடிப்படையில் பிஷப் ஒரு சிறப்பான ஜெபவேளையை நடத்தினார்கள். கலந்து கொண்டவர்களில் அனைவரும் ஆவியானவரின் அபிஷேகத்தினை உணர்ந்தார்கள்.

**கலந்து கொண்ட சில போதகர்கள் தங்கள் அனுபவங்களை கூறுகிறார்கள் :**

1. **Pr. ராதேஷயம் குமார் :** நான் ஜெபிக்கும்போது ஒரு பலத்த காற்று வீசியதையும் அதற்குப்பின் பேரமைதி உண்டானதையும் உணர்ந்தேன். நான் செயலற்றவனானேன். அதன்பின் ஒருவர் என்னருகில் வந்து எனது வாயை அக்கினியால் தொட்டார். தேவன் தமது வல்லமையை எனக்குத் தந்து, என்னுடைய ஆவிக்குரிய வரமாகிய அவருடைய வசனத்தை போதிப்பதிலும் உபதேசிப்பதிலும் அதிக முன்னேற்றத்தை தந்ததாக எனக்கு நிச்சயப்படுத்தினார்.

2. **Pr. ஷாஷி பிரகாஷ் :** தேவன் என்னைத் தொட்டு அக்கினி மயமான பரிசுத்த ஆவியைத் தந்தார். தேவன் பேசுவதைக் கேட்டேன். அவர் தற்போது நான் ஊழியம் செய்கிற

இடத்தில் என்னை நிலை நிறுத்தி, புதிய திறந்த வாசலையும் தந்து ஊழியத்தில் முன்னேறிச் செல்ல வழி வகுப்பார் என்பதே.

2. **Pr. வீரேந்திர பிரஷாத் :** பிஷப் அவர்கள் ஜெபித்தபோது ஒரு வெண் வஸ்திரம் தரித்தவர் என்னருகில் வந்து என் தலையைத் தொட்டார். நான் தேவனுடைய வல்லமையை என் சரீரத்தில் உணர்ந்தேன். மேலும் என்னுடைய எதிர்காலத்தில் அவர் என்னைப் பயன்படுத்தி அநேக ஆத்துமாக்களை அவருடைய ராஜ்ஜியத்தின் பிள்ளைகளாக சேர்ப்பேன் என்பதை ஆவியானவர் எனக்கு உணர்த்தினார்.

4. **Pr. ராஜேஷ் குமார் :** நான் ஜெபிக்கும்போது மேலிருந்து பெரு மழை பெய்தது. அது என்மேல் விழுவதை சிலர் தடுக்க முயற்சித்தார்கள். ஆனால் பிஷப் அவர்கள் என்மீது கை வைத்து ஜெபித்த போது தடுத்து நின்ற உருவங்கள் மறைந்தன. என் மீது மழை மொழிந்தது. தேவன் என்னை அபரிமிதமாக ஆசீர்வதித்தது அநேகருக்கு ஆசீர்வாதமாக இருக்கச் செய்வார் என்று நிச்சயப்படுத்தினார்.

5. **Pr. திக்விஜய் பெஞ்சமீன் :** நான் ஜெபிக்கும்போது ஒரு தரிசனம் கண்டேன். அதில் ஒரு கிராமத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் தேவனை ஆராதித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு மகா பெரிய வெளிச்சம் அவர்கள் மேல் பிரகாசித்தது. கர்த்தர் எனக்கு அதிக ஜனங்களை எனது ஊழியத்தின் மூலமாகத் தருவேன் என்றும், இப்போது அதிக எதிர்ப்புள்ள இடங்களில் நான் எனது ஊழியத்தின் மூலமாக சபைகளை நாட்டுவேன் என்றும் கர்த்தர் நிச்சயப்படுத்தினார்.

## `ôúXôm ª `ù]¬ ù_Tdá0ûL

| நாள் | நேரம் |
|---|---|
| **14.04.2012, சனிக்கிழமை** | **மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை** |

*இடம் :* **ஷாலோம் கிளை அலுவலகம்,**
**M.T.N.** பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்) வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

தேவ செய்தி : **சகோ. S. செல்வராஜ்**
ஓய்வு பெற்ற ஆசிரியர், புத்தளம்.

***யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.***

தொடர்புக்கு

**சகோ. G. செல்வதுரை, Cell : 94876-89869,**
**சகோ. ஜார்ஜ், Cell : 98944-78405 சகோ. கிங்பெர்ட், Cell : 94868-64820**

# ஜெபிக்க வேண்டுகிறோம்...



**பீல் மக்கள் இரட்சிப்பிற்காக...**

✞ குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் சுமார் 1 கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்கள் வாழ்கின்றனர், அவர்கள் அனைவரும் இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

✞ குடி, திருட்டு, விபச்சாரம், சண்டை போன்ற பழக்கவழக்கங்களுக்கு அடிமைப்பட்டுள்ள பீல் ஜனங்கள் அனைவரும் விடுதலை பெற ஜெபியுங்கள்.

✞ பிசாசின் பிடி, மந்திரக் கிரியைகள், மற்றும் பில்லி சூனியம் போன்ற கட்டுகள் மற்றும் வியாதியினால் கட்டப்பட்டுள்ள பீல் ஜனங்கள் அனைவரும் விடுதலை பெற ஜெபியுங்கள்.

✞ பீல் மக்கள் வாழும் ஒவ்வொரு கிராமத்திலும் மின்சாரம், குடிநீர், சாலை, பள்ளி, மருத்துவமனை போன்ற அடிப்படை வசதிகளை அரசாங்கம் செய்து கொடுக்க ஜெபியுங்கள்.

✞ பீல் மக்கள் வாழும் அனைத்து கிராமங்களில் நல்ல மழை பெய்யவும், பீல் மக்கள் நிலங்களில் உள்ள சாபங்கள் நீங்கி நல்ல விளைச்சல் உண்டாகவும் ஜெபியுங்கள்.

✞ பீல் மக்கள் வாழும் கிராமங்களில் உள்ள அனைத்து ஜனங்களும் ஒருவரையொருவர் நேசித்து அன்புடன் சண்டை, தகராறு இல்லாமல் சமாதானத்துடன் வாழ ஜெபியுங்கள்.

✞ குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் சுவிசேஷம் அறிவிக்கப்படாத அநேக கிராமங்கள் உண்டு, அனைத்து கிராமங்களிலும் சுவிசேஷம் அறிவிக்கப்படவும், ஊழியர்கள் எழும்பவும், திருச்சபைகள் கட்டப்படவும் ஜெபியுங்கள்.

**பீல் சுதேச ஊழியர்கள் மற்றும் திருச்சபைகளுக்காக...**

✞ 2015ஆம் ஆண்டிற்குள் புதிதாக 1000 சுதேச ஊழியர்களும், புதிதாக 1000 சபைகளும் உருவாகும்படியாகவும், ஆலயங்கள் கட்டப்படாத கிராமங்களில் ஆலயம் கட்டப்படவும் ஜெபியுங்கள்.

✞ பணித்தளங்களில் நடைபெற்று வரும் ஆலய கட்டுமானப் பணிகள் தடையின்றி நடைபெற ஜெபியுங்கள்.

✞ ஷாலோம் சபைகளும், சபைகளிலுள்ள விசுவாசிகளும் விசுவாசிகளின் குடும்பங்களும், ஊழியர்களும், ஊழியர்களின் குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படும்படியாக ஜெபியுங்கள்.

✞ தேவன் ஏற்படுத்திக் கொடுத்த நம் ஷாலோம் திருமண்டலத்திற்காகவும் அனைத்து சபை ஒருங்கிணைப்புகளுக்காகவும் ஜெபியுங்கள்.

✞ ஊழியர்கள், விசுவாசிகள், மூப்பர்கள் வாகனங்களில் பிரயாணம் செய்யும்போது தேவனுடைய முழுமையான பாதுகாவல் அவர்களுடன் எப்போதும் இருக்கும்படியாகவும், எந்தவித விபத்துக்கள் நேராதபடியும் ஜெபியுங்கள்.

✞ சபைகளில் பரிசுத்த ஆவியானவரின் நிறைவு காணப்படவும், சபைக்கு வருகின்ற அனைவரும் பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொள்ளவும், சபைகளிலுள்ள மூப்பர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, ஊழியத்தில் ஊழியர்களுடன் இணைந்து ஊழியம் செய்ய ஜெபியுங்கள்.

✞ சபைகளிலுள்ள விசுவாசிகள் விசுவாசத்தில் தளர்ந்துவிடாமலிருக்கவும், மீண்டும் பாவ பழக்கவழக்கங்களில் விழுந்து விடாமலிருக்கவும், விசுவாசிகள் சாட்சியுள்ள வாழ்க்கை வாழும்படியாகவும், அவர்களுடைய வாழ்க்கையைப் பார்க்கின்ற அநேக புறஜாதியார் இயேசுவண்டை வரவும் ஜெபியுங்கள்.

✞ ஒவ்வொரு சபையிலும் 100க்கும் அதிகமான குடும்பங்கள் ஆராதனையில் பங்குபெற ஜெபியுங்கள்.

✞ ஒவ்வொரு சபையிலுள்ள விசுவாசிகள், மூப்பர்கள் அனைரும் அனைத்து ஞாயிறு ஆராதனை மற்றும் இதர கூட்டங்களிலும் கலந்து கொள்ளவும், இதன் மூலம் தேவன் அவர்களுடைய வாழ்க்கையை ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

✞ சபைகளில் நடைபெறும் பெண்கள் ஊழியங்களில் ஊழியக்காரிகள் அனைவரும் நன்கு ஊழியத்தில் ஈடுபடவும், இதன் மூலம் பெண்கள் மத்தியில் ஒரு பெரிய எழுப்புதலை தேவன் கட்டளையிடவும் ஜெபியுங்கள்.

**பீல் ஆதிவாசி சிறுவர்கள் மற்றும் சிறுவர் ஊழியங்களுக்காக...**

✞ சபைகளில் நடைபெறும் சிறுவர் ஊழியங்களுக்காகவும், சிறுவர்கள் அனைவரும் இரட்சிக்கப்படவும், அனைத்து சிறுவர்களும் வேத அறிவில் வளரவும் ஜெபியுங்கள்.

✞ சபைகளிலுள்ள அனைத்து வாலிபர்களுக்காகவும், அவர்கள் சபையின் தூண்களாக மாறவும், அவர்கள் மத்தியில் ஒரு பெரிய எழுப்புதல் உண்டாகவும், வாலிபர்களின் படிப்பு, தொழில், வேலைவாய்ப்பு மற்றும் எதிர்காலம் போன்றவற்றிற்காகவும் ஜெபியுங்கள்.

✞ சபையிலுள்ள சிறுவர்கள் மற்றும் வாலிபர்களின் கல்வியறிவுக்காகவும், எதிர்காலத்தில் அவர்கள் மருத்துவர், வக்கீல், இஞ்ஜினியர், ஆசிரியர், கலெக்டர், வங்கி அதிகாரி, காவல் துறை, போன்ற பதவிகளில் இருக்கும்படியாக ஜெபியுங்கள்.

✞ குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் விடுதிகளில் தங்கிப் படிக்கும் ஊழியர்களின் பிள்ளைகளுக்காகவும், விசுவாசிகளின் பிள்ளைகளுக்காகவும், அவர்களுக்கு தேவன் தேவையான ஞானத்தையும், நல்ல சரீர சுகத்தையும் தரும்படியாகவும் ஜெபியுங்கள்.

✞ நமது பணித்தளங்களில் மே மாதம் சிறுவர்களுக்கான CBC (Children Bible Class) நடத்த ஆயத்தமாகி வருகிறோம். இதற்காக ஜெபியுங்கள்.

**ஷாலோம் நிறுவனர் குடும்பத்திற்காக...**

✞ பிஷப். தேவதாஸ், சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களுக்காகவும், அவர்களின் பிள்ளைகள் டைட்டஸ், ஷாலோம், ஷெக்கினா ஆகியோருக்காகவும்... குஜராத் தாகோத் பணித்தள அலுவலகத்தில் பணிபுரியும் தேவ பிள்ளைகளுக்காகவும்... தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் அனைத்து தேவ பிள்ளைகளுக்காகவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் ஆதரவாளர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்களுக்காக....**

✞ ஷாலோம் ஊழியத்தின் தேவைகள் அனைத்தையும் தேவன் சந்திக்கவும், ஊழியத்தைத் தாங்கிவரும் ஒவ்வொரு பங்காளர்களும், அவர்களுடைய குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபியுங்கள்.

✞ நம் ஷாலோம் ஊழியங்களை ஜெபத்தினாலும் பொருளுதவியினாலும் தாங்கி வருகிற நமது ஆதரவாளர்கள் குடும்பங்களுக்காகவும் சபைகளுக்காகவும் ஊழியங்களுக்காகவும், இதர ஊழிய ஸ்தாபனங்களுக்காகவும், ஸ்தாபன தலைவர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

✞ வளர்ந்து வரும் நம் ஷாலோம் ஊழியத்தின் திரளான தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

✞ நம் ஷாலோம் ஊழியத்தின் Board Members மற்றும் தன்னார்வத் தொண்டர்கள், பிரதிநிதிகளுக்காக ஜெபியுங்கள்.

✞ தூத்துக்குடி அலுவலகத்தில் தன்னார்வமாக செயல்படுகிற சகோ. அற்புதராஜ் மர்காஷியஸ் (கடித தொடர்பு) சகோ. பிரேம் குமார் (Accounts) மற்றும் அனைத்து ஊழியர்களுக்காகவும் ஜெபிங்கள்.

## ஏப்ரல் மாத ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்

**CBC (Children Bible Class)**

வருகின்ற மே மாதம் நமது பீல் ஆதிவாசி சிறு பிள்ளைகளுக்காக நடத்தப்படும் CBC–க்காக ஜெபியுங்கள். இதன் மூலம் சுமார் 35000 சிறுவர்கள் சந்திக்கப்படவும், இதற்காக தயாரிக்கப்படும் C.D.-க்கள், புத்தகங்கள், பயிற்சிக் கையேடுகள் ஆகியவற்றிற்காக ஜெபியுங்கள்.

**பணித்தள பார்வை :–**

வருகின்ற ஏப்ரல் 18ம் தேதி முதல் 24ம் தேதி வரை நமது பணித்தளங்களைப் பார்வையிடச் செல்லும் Pr. ஆமோஸ் (மார்த்தாண்டம்) குழுவினருக்காக ஜெபியுங்கள். அவர்களை தேவன் வல்லமையாக பயன்படுத்தவும், பிரயாணங்களை ஆசீர்வதிக்கும்படியாகும், நல்ல பாதுகாப்பை தேவன் தரவும் ஜெபியுங்கள்.

**புதிய நிதியாண்டு :–**

2011 – 2012 நிதி ஆண்டில் கர்த்தர் நம் ஊழியத்தின் தேவைகளை சந்தித்து வழி நடத்தினார். அதேபோல் 2012–2013 நிதியாண்டில் தேவன் இன்னும் அதிகமாக தேவைகளை சந்திக்கும்படி ஜெபியுங்கள். குறிப்பாக ஊழியர்கள், மூப்பர்கள், பெண்கள், வாலிபர், சிறுவர் பயிற்சிகளை நடத்த Missionary Programme Expense தேவைகளை சந்திக்கும்படியாக ஜெபியுங்கள்.

**வேதாகம கல்லூரி :–**

நம்முடைய ஆதிவாசி மக்கள் மத்தியில் வேதாகம அறிவை வளர்க்கும்படியாகவும், அநேக ஊழியர்களை எழுப்பும்படியாகவும் வேதாகமக் கல்லூரி அவசியப்படுகிறது. இதற்கு தேவன் குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் நல்ல இடத்தைத் தந்து தேவைகளை சந்தித்து ஆசீர்வதிக்கும்படியாக ஜெபியுங்கள்.

**கால சீதோஷண நிலைக்காக :–**

வருகின்ற ஏப்ரல் – மே மாதங்களில் வட இந்தியாவில் அதிக வெயில் நிமித்தமாக மிக கடுமையான வெப்பம் காணப்படும். இதனால் சிறியவர்களுக்கும் பெரியவர்களுக்கும் பல வியாதிகள் வந்து தாக்கக் கூடும். நம்முடைய விசுவாசிகள் ஊழியர்களை தேவன் பாதுகாக்க ஜெபியுங்கள்.

**ஷாலோம் ஜெப சேனை :–**

நமது ஷாலோம் ஊழியங்களுக்காகவும், பீல் ஆதிவாசி மக்களின் இரட்சிப்பிற்கவும் தமிழ்நாட்டில் தினமும் 5 நிமிடங்கள் அல்லது மாதம் 1 மணி நேரம் அல்லது வாரத்தில் ஒரு மணி நேரம் அல்லது சங்கிலித் தொடர் ஜெபம் என தனியாகவோ குழுவாகவோ ஜெபிக்கக்கூடிய 300 பேர் கொண்ட ஷாலோம் ஜெப சேனை எழும்ப ஜெபியுங்கள்.

**சென்னை கிளை அலுவலகத்திற்காக...**

புதிதாக சென்னையில் நமது கிளை அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சென்னையில் தேவன் நம் ஊழியங்களுக்காக ஒரு திறந்த வாசலை கொடுத்து, இன்னும் பல ஆதரவாளர்களை எழுப்பவும் ஜெபியுங்கள்.

**இந்தியாவிற்காக...**

நமது தேசத்தில் ஆட்சி செய்யும் பிரதமர், முதலமைச்சர்கள், கலெக்டர், தாசில்தார், பஞ்சாயத்து தலைவர் மற்றும் அனைத்து அதிகாரிகளும் நீதியோடு ஆட்சி செய்யவும், மக்கள் அமைதியாக வாழவும் ஜெபியுங்கள்.

இந்திய தேசத்தில் உள்ள அனைத்து மிஷனெரி ஊழிய ஸ்தாபனங்களுக்காகவும் சபைகளுக்காகவும் சுவிசேஷ ஊழியங்களுக்காகவும் மற்ற ஊழியங்களுக்காவும் ஜெபியுங்கள்.

*நாங்களும் உங்களுக்காக பாரத்துடன் ஜெபித்து வருகிறோம்.*

---

**FORM IV**

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | Thoothukudi |
| 2. | Periodicity of its Publication | : | Monthly |
| 3. | Printer's Name | : | S. Joseph |
| 4. | Address | : | Rajan Press<br>59, Palayamkottai Road,<br>Thoothukudi - 628 002. |
| 5. | Whether the Citizen of India | : | Yes |
| 6. | Publisher's Name | : | V. Devadoss |
| 7. | Address | : | 5/168, Caldwell Colony,<br>3rd, Street,<br>Thoothukudi - 628 008. |
| 8. | Editor's Name | : | V. Devadoss |
| 9. | Address | : | As above |

I V. Devadoss, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.


sd

Date : 30.03.2012 Signature of Publisher

# ஜாண் C.F. ஹேயர் (1793–1873)

*மிஷனெரி முன்னோடிகள்*

**ஜாண் கிறிஸ்டியன் பிரடெரிக் ஹோர்,** அமெரிக்காவில் உள்ள லுத்தரன் சபையினரால் வெளிதேசத்திற்கு முதன் முதலாக அனுப்பப்பட்ட மிஷனெரி ஆவார். ஆந்திரப்பிரதேசத்தில் உள்ள குண்டூர் பகுதியில் தனது ஊழியத்தை நிறுவினார். தந்தை ஹேயரை நினைவுபடுத்தும் வகையில் லுத்தரன் சபை பரிசுத்தவான்களாகிய பர்தொலேமேயு சீகன்பால்க், லுத்விக் இங்வர் நாமன்சன் ஆகியோருடன் ஹேயரின் பெயரையும் வெளியிட்டுள்ளது. ஜாண் கிறிஸ்டியன் பிரடெரிக் ஹேயர், ஜெர்மனி லோவர் சாக்சனில் உள்ள ஹெல்ம்ஸ்டெட்டில் பிறந்தார். அவருடைய தந்தை ஜாண் ஹென்ரிச் கோட்டிலிப் ஹோர், தாய் பிரடெரிக் ஷோடா ஜாண் வேஹ்னர் ஆவர். 1807 ஆம் ஆண்டு அவருடைய பெற்றோர் அமெரிக்காவில் உள்ள தாய்வழியில் சொந்தமான மாமா வேஹ்னர் வீட்டிற்கு அவரை அனுப்பினார். இவர் தோல் பதனிடுவதிலும், தொப்பி செய்வதிலும் நிபுணராக விளங்கினார்.



ஜாண் சி.எப்.ஹேயர் பிலதெல்பியாவில் இறையியல் பயின்றார். 1815ஆம் ஆண்டு ஜெர்மனிக்குத் திரும்பி வந்து தனது சகோதரர் ஹென்றியுடன், கோட்டிங்கன் பல்கலைக்கழகத்தில் இறையியல் படித்தார். 1847 ஆம் ஆண்டு, மேரிலேண்டு ஸ்கூல் ஆஃப் மெடிசின் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார். 1817 ஆம் ஆண்டு ஜாண் சி.எப். ஹெயர், மேரி கேஷ் என்ற விதவையை மணந்தார். இவர்களுக்கு ஆறு குழந்தைகள் பிறந்தனர். பிலதெல்பியாவில் உள்ள சீயோன் பள்ளியில் சி.எப். ஹேயர் ஆசிரியராக பணிபுரிந்தார். கெட்டிஸ்பர்க் கல்லூரியிலும் கற்றுக்கொடுத்தார். மேலும் அமெரிக்காவில் உள்ள மேற்கு பென்சில்வேனியா லுத்தரன் சபை மாமன்றத்தின் தலைவராகவும் ஜாண் சி.எப். ஹேயர் இருந்தார்.

1816 ஆம் ஆண்டு ஜாண் சி.எப். ஹேயர் ஒரு பிரசங்கியாராக அங்கீகாரம் பெற்றுக்கொண்டார். ஹேயர் மூன்று வருஷமாக பிரசங்கியாராக இருந்து வந்தார். 1820 ஆம் ஆண்டு முழுவதும் பட்டம் பெற்று அங்கீகரிக்கப்பட்டு ஊழியம் செய்தார். அவர் இருபது வருஷங்களில் பல சபைகளை நிறுவினார். பென்சில்வேனியா, மேரிலேண்ட், நியூயார்க், நடுமேற்கு நாடுகள், மிசொரி போன்ற பகுதிகளில் ஞாயிறு பள்ளிகளை நிறுவினார். 1837ஆம் ஆண்டு பிட்ஸ்பர்க்கில் உள்ள முதலாவது ஆரம்பிக்கப்பட்ட சுவிசேஷ லுத்தரன் சபைக்கு முதல் போதகராவும் இருந்தார்.

ஹேயரின் மனைவி மற்றும் குழந்தைகள், பென்சில்வேனியா சோமர்செட்டில் இருந்தபோது, 1839 ஆம் ஆண்டு ஹேயரின் மனைவி மேரி ஹேயர் இறந்தார். இதனைத் தொடர்ந்து ஹேயர் வெளிநாட்டிற்குச் சென்று ஊழியம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார். அதற்காக அவர்

பால்டிமோரில் இருந்தபோது சமஸ்கிருதம் மற்றும் மருந்துகள் குறித்து படித்தார். 1841ஆம் ஆண்டு மூன்று மிஷனெரி தம்பதிகளுடன் பிரெண்டா என்ற கப்பலில் இந்தியாவிற்கு வந்தார். 1845ஆம் ஆண்டு அமெரிக்காவுக்குச் சென்று அவருடைய மிஷனெரி பணிகளைச் செய்து, பால்டிமோரில் செயின்ட் ஜான்ஸ் சபையையும் நிறுவினார். அதே வேளையில், 1847ஆம் ஆண்டு மருத்துவம் படித்து மேரிலேண்ட் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டமும் பெற்றார்.

1847ஆம் ஆண்டு ஹேயர் இரண்டாவது முறையாக இந்தியா வந்து, ஆந்திரப்பிரதேசத்தில் உள்ள குண்டூர் பகுதியில் ஊழியம் செய்தார். ஆரம்பத்தில் பென்சில்வேனியா ஊழிய ஸ்தாபனம் மூலம் பின்பு மேலை நாட்டு ஊழிய பொது மாமன்றம் மூலமாகவும் ஆதரிக்கப்பட்டார். ஆங்கில அரசாங்க அலுவலகம் மூலமாகவும், ஹேயர் உற்சாகப்படுத்தப்பட்டார். அவர் குண்டூர் வட்டாரத்தில் மருத்துவமனைகயையும் பள்ளிக்கூடங்களையும் நிறுவினார்.

உடல் நலம் காரணமாக 1857ஆம் ஆண்டு ஹேயர் அமெரிக்கா சென்றார். அங்கு குறிப்பாக மினிசோட்டா மாநிலத்தில் உள் பின்தங்கியுள்ள சபைகளை நிர்வகித்தார். 1867–1868 வரை ஹேயர் ஜெர்மனி சென்றார். 1868ஆம் ஆண்டு அவருடைய 77ஆம் வயதில் மூன்றாவது முறையாக இந்தியா வந்தார். 1871ல் ஹேயர் மறுபடியும் அமெரிக்கா சென்றார். 1872ஆம் ஆண்டு குருவானவராகவும், பிலதெல்பியாவில் உள்ள லுத்தரன் இறையியல் பள்ளிக்குத் தந்தையாகவும் நியமிக்கப்பட்டார். அவருடைய நீண்ட கால அனுபவத்தின் காரணமாக ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் மதிக்கப்படவும் அன்புகூறவும் பட்டார்.

ஹேயர் ஏறக்குறைய 2500 டாலர் பணத்தை தனது குழந்தைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் விட்டுச்சென்றதுமின்றி அவர்கள் லுத்தரன் சபையில் உறுப்பினர்களாக நிலைத்திருக்க வேண்டும் என்றும் மதுபானம் மற்றும் புகையிலைக்கு விலகியிருக்க வேண்டும் என்றும் நிபந்தனை இட்டார். 4000 டாலர் பணத்தை சோமர்செட்டில் உள்ள லுத்தரன் சபைக்கும் பிலதெல்பியாவில் உள்ள லுத்தரன் இறையியல் கல்லூரிக்கும் இந்தியாவில் ஊழியம் செய்த பெனிசில்வேனியா ஊழிய நிறுவனத்துக்கும் மற்றும் செலினோபில் ஜெர்மன்டவுனில் உள்ள அநாதை ஆசிரமங்களுக்கும் கொடுத்தார்.

1880ஆம் ஆண்டு லுத்தரன் இறையியல் கல்லூரி மாணவர்கள் ஒரு மிஷனெரி சங்கத்தை ஏற்படுத்தினர். அதற்கு “தந்தை ஹேயர் மிஷனெரி சங்கம்” என்று பெயரிட்டு சிறப்பித்தனர். 1842ஆம் ஆண்டு குண்டூரில் ஹேயர் நிறுவிய மிஷனெரி தளமும், 1845ஆம் ஆண்டு லூயிஸ் பி. மேனோ வலட் ராஜமுந்தரி ஊழியமும் வளர்ச்சி பெற்று 1927 ஆம் ஆண்டு ஆந்திரா சுவிசேஷ லுத்தரன் சபையாக ஒன்றுபடுத்தப்பட்டது. 2009ஆம் ஆண்டு கணக்கின்படி, இந்தியாவில் உள்ள பெரிய சபைகளில் ஒன்றாகவும், ஆசியாவில் மூன்றாவது பெரிய சபையாகவும் விளங்கியது. AELC- ன் தலைவர் டாக்டர் V.E. கிறிஸ்டோபர் அவர்களின் கூற்றுபடி “மிஷனெரிகளால் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கான வழிமுறைகள் AELC- தொடர்ந்து நடைபெறுகிறது என்றும், மருத்துவமனைகள் நிறுவுதல், பெண்களின் முன்னேற்ற நிலை, கிராம வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் தாய்–சேய் ஆரோக்கிய திட்டங்களிலும் கவனம் செலுத்தி வருகிறது என்றார். C.F ஹேயரின் பெயரை நினைவுபடுத்தும் வகையில் இவரது பெயர்

ஆந்திராவிலுள்ள தீனாபுர், பிரங்கிபுரம் இடங்களில் உள்ள கல்லூரிகளுக்கும் தொழிற்பள்ளிகளுக்கும் சூட்டப்பட்டுள்ளது. **“கிருபையும் வல்லமையும் உள்ள தேவனே, உம்மை துதிக்கிறேன். எல்லா தேசத்திலும் உம்முடைய ராஜ்ஜியத்தை கட்டுகிற சுவிசேஷகர்களை எழுப்பும்படி ஜெபிக்கிறேன். அளவிடமுடியாத நம்முடைய ரட்சகர் இயேசுகிறிஸ்துவின் ஐசுவரியத்தையும் அவர் ஒன்றான தேவனாகிய உம்மோடும், பரிசுத்த ஆவியோடும் சதாகாலமும் அரசாளுவதை உலகம் கண்டு கொள்ள வேண்டும் என்று ஜெபிக்கிறேன்”** என்பதே ஹேயரின் ஜெபமாக இருந்தது.

1873ஆம் ஆண்டு தனது 80வது வயதில் ஹேயர் மரித்தார். அவருடைய உடல் பென்சில்வேனியா ப்ரீடன்ஸ் லுத்தரன் சபை கல்லறையில் உள்ள தனது மனைவியின் கல்லறைக்கு அருகில் அடக்கம் பண்ணப்பட்டது.

## *ஷாலோம் பிரதிநிதிகள் கூடுகை - சென்னை (18.02.2012)*

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்! ஆண்டவருடைய பெரிதான கிருபையினால் 18.02.2012 அன்று மாலை 6.00 மணியளவில் சென்னை, முகப்பேர் கிழக்குப் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகளுக்கான சிறப்பு ஜெபக்கூடுகை நடைபெற்றது.

இந்தக் கூடுகையின் ஆரம்ப ஜெபத்தினை **சகோ. சுதந்திர சிங்** அவர்கள் ஏறெடுக்க, பாடல் மற்றும் ஆராதனை வேளைகளை **சகோ. கிதியோன் சாமுவேல்** அவர்கள் நடத்தினார்கள். மேலும் வந்திருந்த பிரதிநிதிகளுக்கு **சகோ. சுதந்திரசிங்** அவர்கள் ஷாலோம் ஊழியங்களைக் குறித்தும், அதன் வளர்ச்சியினைக் குறித்தும், தற்போது நடைபெற்று வரும் ஊழியங்களைக் குறித்தும் விளக்கினார். மேலும் LCD Projecter மூலமாக பீல் மக்களைப் பற்றியும் அவர்கள் மத்தியில் நடைபெறும் ஊழியங்களைக் குறித்தும் காண்பிக்கப்பட்டது. அதன்பின் நமது **பேராயர் V. தேவதாஸ்** அவர்கள் ரோமர் 15:16 வசனத்தின் அடிப்படையில், ஆண்டவருடைய வார்த்தையினை பகிர்ந்தது கொண்டார்கள்.

இந்தக் கூடுகையில் சுமார் 50க்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். **இதில் 5 குடும்பத்தார் தங்கள் வீடுகளில் ஷாலோம் ஜெபக்கூடுகை நடத்த முன் வந்துள்ளனர். மேலும் புதிதாக நான்கு பேர் ஷாலோம் பிரதிநிதிகளாக செயல்பட முன் தங்களை அர்ப்பணித்தனர். சென்னைப் பகுதியில் ஷாலோம் ஊழியங்களுக்கு இன்னும் அதிகமான திறந்த வாசல்களை தேவன் தரும்படியகா ஜெபியுங்கள்! தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**

`ôúXôm ETYôNd áÓûL

இடம் : **தலைமை அலுவலகம் அன்பு பகிர்வு இயக்கம்,**

5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 628 008.

நாள் : **14 – 04 – 2012,** ***சனிக்கிழமை,*** நேரம் **: காலை 9.30 மணி முதல் 1.00 வரை**

தேவ செய்தி : ***Pr. ரூபன் சாமுவேல்*** (பவர் IPC சபை, தூத்துக்குடி)

# ஷாலோம் ஜெப பங்காளர்கள்

*(Shalom Prayer Partners)*

**(ஜெபிக்க தீர்மானிக்கும் கட்டத்தில் (✓) குறியிடவும்)**

(4–ம் பக்கத்தின் தொடர்ச்சி...)

( ) அனுதினமும் 5 அல்லது 10 நிமிடங்கள் ஜெபிக்க முன் வருகிறேன்.

( ) வாரத்தில் 1 மணி நேரம் **தனியாக** ஜெபிக்க முன் வருகிறேன்.

( ) வாரத்தில் 1 மணி நேரம் **குழுவாக** இணைந்து ஜெபிக்க முன் வருகிறேன்.

( ) மாதத்தில் 1 மணி நேரம் **தனியாக** ஜெபிக்க முன் வருகிறேன்.

( ) மாதத்தில் 1 மணி நேரம் **குழுவாக** இணைந்து ஜெபிக்க முன் வருகிறேன்.

( ) மாதம் ஒரு நாள் எங்கள் பகுதியில் உபவாச ஜெபம் நடத்த முன் வருகிறேன்.

( ) மாதம் ஒரு முறை இரவு 12 மணியிலிருந்து மறுநாள் இரவு 12 மணி வரை நடக்கும் **சங்கிலித் தொடர் ஜெபத்தில்** (Chain Prayer) ---- to ---- (1 மணி நேரம்) ஜெபிக்க முன் வருகிறேன்.

( ) அவ்வப்போது, எப்போதாவது ஜெபிக்க முன் வருகிறேன்.

**ஷாலோம் ஜெபக்குறிப்புகளை எனக்கு**

( ) போஸ்ட் ( ) கொரியர் ( ) இ–மெயில்

**மூலமாக எனக்கு அனுப்பிவையுங்கள்.**

**அவர்கள் ஜெபம்பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது, அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினால் நிரப்பப்பட்டு, தேவ வசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள. அப். 4:31**

P.T.O.

***எனது ஜெபக்குறிப்பு :***

***எனது முகவரி / My Address***

பெயர் / Name ______________________

முகவரி / Address ______________________

______________________

ஊர் / Town ______________________

மாவட்டம் / Dist. ______________________

பின்கோடு / Pin. ______________________

தொலை பேசி / Ph. ______________________

இ–மெயில் / e-mail ______________________

(ஷாலோம் ஊழியங்களுக்காக ஜெபிக்க முன் வருவோர்
இந்தப் படிவத்தினை நிரப்பி, கத்தரித்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்)

**SHARING LOVE MISSION**

New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Ph. :0461 - 2375468 Cell : 9345675468

# காணிக்கை அனுப்பும் வழிகள்

- ⇨ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ⇨ M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- ⇨ D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை அனுப்பலாம்.
- ⇨ இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
- ⇨ வெளிநாட்டில் வசிப்பவர்கள் Bank Of Baroda வங்கி மூலம் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்பலாம். FCRA A/c. No.07080100002672 - Sharing Love Mission. IFS Code : BARB0TUTICO

**நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.**

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

Tamilnad Mercantile Bank
A/c. No. : 106100710400009
(I F S Code : TMBL0000106)

Axis (U.T.I) Bank
A/c. No. : 105010100094373
(IFS Code : UTIB0000105)

I.C.I.C.I Bank
A/C. No. 613901112799
(IFS Code : ICIC0006139)

**ஆதரவாளர்கள் எங்களது வங்கிக் கணக்கில் காணிக்கை செலுத்தும் போது, உங்களது பெயரை கண்டிப்பாக கம்யூட்டரில் பதிவு செய்யும்படி ஒவ்வொரு முறையும் வங்கி அலுவலகரிடம் கூறி அதை உறுதி செய்து கொள்ளவும், இல்லையெனில் நீங்கள் செலுத்தும் காணிக்கை யார் செலுத்தியது என்ற விபரம் எங்களுக்கும் தெரியாமல் போக வாய்ப்புள்ளது.**

ரஷியாவில் சமீபத்தில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் புதின் அமோக வெற்றி பெற்று மூன்றாவது முறையாக ஜனாதிபதி ஆகி இருக்கிறார். அவருக்கு பல்வேறு நாட்டுத் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

---

கடந்த 12ம் தேதி 121 பயணிகளுடன் அகமதாபாத்திலிருந்து மும்பை சென்ற ஏர் இந்தியா விமானம் தரையிறங்கும்போது விபத்து ஏற்பட்டது. விமானம் அதிக வேகத்தில் இறங்கியதாலும், சரியான கோணத்தில் இறங்காததாலும் விமானத்தின் வால்பகுதி தரையில் உரசி இந்த விபத்து நேரிட்டது. இதில் பயணிகள் மற்றும் விமானிகள் யாருக்கும் எந்தவித பாதிப்பும் இல்லை.

---

பசிபிக் கடல்பகுதியில் கிரிபாதி என்ற சிறிய நாடு அமைந்துள்ளது. இது பவழத்தீவுகளைக் கொண்டது. கடல் சீற்றம் மற்றும் கடல் நீர்மட்ட உயர்வினால் இந்த நாட்டு மக்கள் தற்போது பெரிய பாதிப்புக்குள்ளாகி வருகிறார்கள். இங்கு 32 வீடுகளுடன் இருந்த தீவு கடலில் மூழ்கி மாயமாகிவிட்டது. எனவே இந்நாடு வேறு இடத்திற்கு இடமாறும் முயற்சி நடந்து வருகிறது. இந்நாடு வேறு இடத்திற்கு இடமாற தேவையான இடம் கிடைக்கும் பட்சத்தில் உடனடியாக அந்த இடத்தை விட்டு அந்நாட்டு மக்கள் அனைவரும் வெளியேறிவிடுவார்கள்.

---

இந்தியா, ஆஸ்திரேலியா. இலங்கை ஆகிய மூன்று நாடுகளுக்கு இடையிலான காமன்வெல்த் பேங்க் கோப்பைக்கான ஒரு நாள் கிரிக்கெட் தொடர் நடைபெற்றது. இதில் லீக் சுற்று முடிவில் இலங்கை, ஆஸ்திரேலிய அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறின. நடப்புச் சாம்பியன் இந்தியா வெளியேறியது. மூன்று ஆட்டங்களைக் கொண்ட இறுதிப்போட்டியில் ஆஸ்திரேலியா இலங்கையை வென்று கோப்பையைக் கைப்பற்றியது.

நன்றி : www.dinamalar.com


**எங்களுடன் தொடர்பு கொள்ள**

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

# கிராம ஆலயம்

# முண்டத்

## மத்தியப்பிரதேசம்



மத்தியப்பிரதேசத்தில் ஜாபுவா மாவட்டத்தில் இந்த முண்டத் கிராமம் அமைந்துள்ளது. இந்த கிராமத்திலுள்ள மக்கள் வில் அம்புகளை வைத்து வழிப்பறி செய்தல் கொள்ளையடித்தல் போன்றவற்றில் அதிகமாக ஈடுபடுகிறவர்கள். வியாதியென்றால் மந்திரவாதிகளை நாடிச் செல்வது இவர்களுடைய வழக்கம்.

இந்தக் கிராமத்தை சேர்ந்த சகோ. பித்தாபாய் புரியா ஐந்து வருடங்களாக புத்தி சுயாதீனம் இல்லாமல் எல்லோரையும் கடிக்கும் பழக்கத்துடனும், தீராத வயிற்று வலியினாலும் கஷ்டப்பட்டார். இவரது தகப்பனார் ஒரு மந்திரக் கிரியை செய்பவர். ஆகவே இவருக்காக அநேக மந்திரக் கிரியைகளைச் செய்தார். ஆனாலும் எந்த பலனுமில்லை. ஆகவே, அநேக மந்திரவாதிகளிடமும், புண்ணிய ஸ்தலங்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்டார். ஆகிலும் பித்தாபாய் புரியாவின் நிலைமையில் எந்த மாற்றமுமில்லை.

பின்பு அந்தர்வேலியா என்ற கிராமத்தில் கிறிஸ்தவ கூட்டம் நடைபெறுகிறது என்று கேள்விப்பட்டு ஆலயத்திற்கு பித்தாபாயை அழைத்துச் சென்று ஆலய ஆராதனையில் பங்கு பெற்றார். அன்றைய தினமே பிசாசின் கட்டுகளிலிருந்து தேவன் விடுதலை கொடுத்தார். பித்தாபாயின் மனநிலை மற்றும் உடல் நிலை சரியானது. பின்பு சுதேச ஊழியர் பால் முனியா அவருடைய வீட்டிற்கு சென்று ஜெபித்தார். பித்தாபாய் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றார். பின்பு பித்தாபாய் வீட்டிலேயே கூட்டம் ஆரம்பிக்கப்பட்டு, வாரம்தோறும் நடைபெற்று வந்தது. முக்கியமாக இந்த கிராமத்தைச் சேர்ந்த ஊர்த் தலைவர் இயேசுவை ஏற்றுக் கொண்டுள்ளார். பித்தாபாய் தேவனுக்கு காணிக்கையாகக் கொடுத்த நிலத்தில் ஆலயம் கட்டப்பட்டு ஆராதனை நடைபெற்று வந்தது.

தற்போது விசுவாசிகள் அதிகரித்தபடியால் ஆலயத்தில் போதுமான இடம் இல்லாமையால், அதே கிராமத்தில் மற்றொரு இடத்தில் புதிய ஆலயம் ரூ. 3 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. இந்த பகுதியில் **Rev.** பால்பாய் முனியா குடும்பமாக ஊழியம் செய்து வருகிறார். இந்த கிராம ஆலயம் 11.03.2012 அன்று பிஷப் V. தேவதாஸ் அவர்கள் தலைமையில் Pr. எட்வர்ட் சாம்ராஜ் (W.M.E. சபை, தூத்துக்குடி) அவர்கள் மூலமாக பிரதிஷ்டை செய்யப்பட்டது.

***Sponsor Name :*** **Jesus Redeems,** Nalumavadi

**ரூ. 2 இலட்சம் மதிப்பில் அல்லது ரூ. 1 இலட்சம் மதிப்பில் இந்த 2012ம் ஆண்டிற்குள் 100 ஆலயங்கள் கட்டிக் கொடுக்க முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!!**

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



| | | |
|---|---|---|
| மாணவியின் பெயர் | : | **நீலம்** |
| தந்தையின் பெயர் | : | ரத்தன் மாவி |
| தாயார் பெயர் | : | காஸ்மீரா பேன் |
| பிறந்த நாள் | : | 15.03.2003 |
| படிக்கும் வகுப்பு | : | 4th Std., |
| சொந்த ஊர் | : | போர்கேடா |
| மாவட்டம் | : | தாகோத் |
| மாநிலம் | : | குஜராத் |

## மாணவியின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–

இவளுடைய தந்தை சகோ. ரத்தன்மாவி இயேசுவை அறியாத பீல் ஆதிவாசி குடும்பத்தை சேர்ந்தவர். இவரின் குடும்பம் அசுத்த ஆவிகளை வணங்கி வந்ததால், அசுத்த ஆவிகளின் பிடியில் சிக்கி குடும்பத்தில் சமாதானமின்றி அதிக வேதனைக்குள்ளானார்கள். இதிலிருந்து விடுதலை பெற அநேக மந்திரவாதிகளை நாடி மந்திரங்களை செய்தும் எந்த பலனுமில்லை.

ஆகையால் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்த வேளையில், ஷாலோம் ஊழியத்தை குறித்து கேள்விப்பட்டு ஷாலோம் ஊழியரிடம் சென்று ஜெபித்தபோது தேவன் அற்புதமாக விடுதலை கொடுத்தார். குடும்பமாக இயேசுவை ஏற்றுக்கொண்டனர். தொடர்ந்து வேதம் வாசித்து, ஜெபித்து, ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வந்தபோது ஊழிய அழைப்பை பெற்று கங்கேலா என்ற கிராமத்தில் போதகராக ஊழியம் செய்து வருகிறார். தற்போது இவருடைய சபையில் 1000 விசுவாசிகள் உள்ளனர்.

**மாணவியைக் குறித்து :–** நீலம் நன்றாக படிப்பாள். ஒழுங்காக ஆலயத்திற்கு செல்பவள். கீழ்ப்படிதலுள்ள மாணவி.

**ஜெபியுங்கள்:–** இவளுக்காக, இவளுடைய படிப்பிற்காக, நல்ல சரீர சுகத்திற்காக, பெற்றோர் செய்கிற ஊழியத்திற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**மாணவியைத் தாங்குபவர் :–** ***Dr. John Kingsly - Nagapattinam.***

நீங்களும் மாதம் ரூ. 500/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரை ஜெபித்துத் தாங்க முன் வரலாம். இன்னும் 330 குழந்தைகளுக்கு ஆதரவாளர்கள் தேவை. உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்குவதற்கு அறிமுகப்படுத்துங்கள்.